1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

78-ம் புத்தகம் 18-ம் இல. யாழ்ப்பாணம் 1953-ம் ஆண்டு வைகாசிமாதம் 14-ந் திகதி வியாழக்கிழமை—பிரதிசதம் 10

## தாயன்பின்மிக்க தேவதாய்

உலகின் வடிவை, கடலின் ஆழத்தை, காற்றின் வேகத்தை, மின்சாரத்தின் சக்தியை நிர்ணயித்துள்ளனர் அறிஞர். ஆனால், "தாய்" என்ற இரு எழுத்துக்களாலான சொல்லின் நிறை சக்தியை, பொருளின் ஆழத்தை, அதன் அகலத்தை, அதன் பரப்பை அளந்து அறியக்கூடியவர் யாரோ? வானத்து விண்மீன்களைப்போல எண்ணிலடங்கா மக்கள் நிறைந்த இப்பரந்த உலகில் நாம் குழந்தைகளாக இருந்தபொழுது நமது தாயைவிட நமக்கு அறிமுகமானவர் வேறு யார்? குழந்தைகளுக்கு ஊண், உறக்கம், நாடகம், நாட்டியம், வேடிக்கை விளையாட்டு சகலமும் அதன் தாயே. குழந்தையின் விளையாட்டுப் பொம்மையும், மருந்தும் விருந்தும், உற்ற நண்பனும், கைதேர்ந்த வைத்தியனும், குருவும் ஏன்—அதன் ஆலயம்கொண்ட அன்புக்கடவுளும் அதன் தாயே. தாயின் பெருமையே பெருமை!

ஆம், 'தாய்' என்னும்சொல் இனிமைமிக்கசொல். நமது வாழ்க்கையில் எதிர்ப்படும் எத்தனையோ பொருட்களை, எத்தனையோ சிருஷ்டிகளை நாம் நேசிக்கிறோம். அவைகள்மேல் நமது அன்பைப் பொழிகிறோம். அவைகளும் அன்புக்கு அன்பு காட்டுகின்றன. இவ்வன்பு எல்லாவற்றிலும் தூய்மையான அன்பு — இனிமை பொருந்திய அன்பு—நமது இருதயங்களைக் கொள்ளைகொள்ளும் அன்பு—"தாயன்பு." தாய் ஒருத்தியே நம்மை முற்றிலும் அறிந்து அன்பு செய்பவள். தாயன்பின் தனிப்பெருமையை நிரூபித்தல் அவசியமன்று. தன்னையே தியாகம்செய்து தன்னுடலமுதை அளித்து வளர்த்த தன்மகனிடம் ஓர் தாய் எதிர்பார்ப்பது ஒன்றே ஒன்றுதான்: அன்பு. அன்புக்குப் பிரதியன்பு. நமது அன்புக்குப் பாத்திரமானவள் நம் தாய். நமது அன்பைப் பெற அவளுக்கே முதல்உரிமை உண்டு. தாயன்பின் தனிஉரிமை இது.

நம்மைப்பெற்றெடுத்த தாயைவிடப் பன்மடங்கு அன்புள்ள தாய் ஒருத்திஉண்டு. எனவே, நமது அன்பைப்பெறவும் அவளுக்குப் பன்மடங்கு அதிக உரிமை உண்டு. மனுவுருவெடுத்த நாதன் யேசுவைஈன்ற தேவதாயே அத்தாய். அவள் நமது பூலோகதாய் நம்மை நேசிப்பதைவிட ஆயிரமாயிரமுறை அதிகமாக நேசிக்கின்றாள். பெற்றதாய் நம்மை மறந்தாலும் நம்மைமறக்காதவள் தேவதாய். தாய் தூற்றினும் நம்மை ஆற்றித் தேற்றுபவள் இவள். எனவே, நமது அன்பிற்கு முற்றும் உரியவள் தேவதாய்.

அர்ச். கன்னிமரியம்மாள் கிறீஸ்துநாதரின் தாய்என்னும் சத்தியத்தை யாவரும் அறிவர். ஆனால், அவள் நமக்கும்தாய் என்னும் உண்மையையோ அநேகர் அறியார். அறிந்தும் அதைச் சிந்திப்பவரோ மிக்ச் சிலர். தேவமாதா யேசுநாதரைப் பெற்றெடுத்த போதே நமக்கும் தாயானாள். எவ்விதம்? யேசுநாதர் நமது ஞானச்சரீரத்தின் சிரசு. நாம் அத்திருச்சிரசின் அங்கங்கள். ஞானச்சரீரத்தின் சிரசாகிய யேசுநாதரை ஈன்றபொழுதே, அதன் அங்கங்களாகிய நம்மையும் அவள் ஈன்றாள். மேலும் யேசுநாதர் தமது தாயை நமக்குத் தந்தபோது தாய்க்குரிய அன்பையும், அவளுக்குத் தந்தருளினார். அவ்விதமே நம்மைத் தமது தாயின் பிள்ளைகளாகச் செய்தபோதே அத்தாய்மாட்டுப் பிள்ளைக்குரிய அன்பையும் நமக்குத் தந்தருளினார். அவளுடைய அன்பு நம் எல்லோரையும் அரவணைக்கின்றது.

தன் உதரப் பிள்ளைகளைப் போல்எண்ணி நம்மை நேசிப்பதால் அவள் நமக்குச் செய்ய மறுப்பது ஒன்றுமில்லை. ஆத்தும சத்துருக்களோடு நாம்செய்யும் அனுதின போராட்டத்தில் நமக்கு உறுதுணையாயிருந்து நம்மை அவர்கள் கையிலிருந்து காப்பாற்றுபவள் அவள். ஆபத்தில் நம்மைப் பாதுகாக்கின்றாள். துன்பத்தில் தேற்றுகின்றாள். ஆத்துமஇரட்சணிய அலுவலில் வழிகாட்டுகின்றாள். தேவதாய் நம்மீது வைத்திருக்கும் அன்பு, கருணை, கவலை என்னவென்றால், அவளைத் தேடினோர்—அவள் உதவியை நாடினோர் உதவி அடையாமற் போனதில்லை. இதற்குத் தேவதாய் பக்தரான அர்ச். பெர்நார்து சாட்சி பகருகிறார்: "மிகவும்

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

## அம்மா! நீங்கள் எனக்காக ...

இரண்டாவது உலகயுத்தத்தில் என்மகன் கடற்படையில் சேர்ந்திருந்தான். 1945-ம் ஆண்டு வைகாசிமாதம் அவன் சென்றகப்பல் மூழ்கடிக்கப்பட்டது. அவன் உயிர்தப்பி ஒருவாறு வீடுவந்துசேர்ந்தான். "அம்மா, எனக்காக நீங்கள் செபமாலை செபிக்கும்வரை நான் பயப்படவேண்டிய அவசியமில்லை" என்று அவன் திரும்பவும் யுத்தத்துக்குப் புறப்படுகையில் சொன்னான். மூன்று வாரங்களுக்குப்பின் யுத்தம் முடிந்தது. அவனுக்காக நான் ஆயிரம்செபமாலைகள்சொல்லிச் சிலநாட்களாகின்றன. என் மகன் சுகமே திரும்பிவந்துவிட்டான்.

செபமாலையினால் நான் அடைந்துள்ள நன்மைகளை எண்ணமுடியாது. ஆயிரம்காரியங்கள் கேட்டேன். அத்தனையும் கிடைத்தன. அப்படியிருந்தும் செபமாலைத்தாயுடன் நான் புதிதாக அறிமுகப்பட்டவள். ஆயிரம் வருடச்சிநேகிதிபோல் அன்னை என்னை நடத்திவருகிறாள்.

1943-ம்ஆண்டிலே பதினேழு வயதுள்ள எனதுமகன் கப்பற்படையில் சேரும்படி சென்றான். எங்கள் குடும்பவைத்தியர் அவனைப் பரிசோதித்தார். "உன் பற்கள் மோசமாயிருக்கின்றன; கப்பற்படைச்சோதனையில் நீ தேறமாட்டாய்; இதுநிச்சயம்" என்று அவர் கூறினார். என் மகன் புறப்பட்டதும் அவனுக்காகச் செபமாலைசெபிக்க ஆரம்பித்தேன். கடைசிச்செபமாலை முடிந்ததும் என் மன்றாட்டுக் கேட்கப்பட்டது என்னும் உறுதி என்உள்ளத்தில் ஏற்பட்டது. அவன் தேர்ந்தெடுக்கப்பட்டான். பற்களை நன்குபரிசோதித்த டக்றர் ஆட்சேபிக்கவில்லை.

மறுநாள் என்மகனைப் பயணம்அனுப்பி வைக்கும்படி கத்தோலிக்கர்அல்லாத ஒருசிநேகிதியுடன் ஸ்றேஷனுக்குச் சென்றேன். சந்தோஷத்துடன் அவனை வழியனுப்பினேன். இதைக்கண்ட என் சிநேகிதி ஆச்சரியப்பட்டாள். "அம்மா, நீங்கள் உங்கள்மகனை இனிப் பார்ப்பது நிச்சயமில்லையே! இவ்வளவு துணிவுடன் கண்ணீர்சிந்தாமல் அனுப்பி வைத்தீர்களே!" என்றாள். "எனக்குக் கடவுளிலும், செபத்திலும் நம்பிக்கைஉண்டு; தேவதாயாரிடம் என்மகனை ஒப்படைத்துவிட்டேன; மிகவும்இரக்கமுள்ள தாயே என்னும் செபத்தை அவனுக்காகச் சொல்வதுடன் அவன்சேமமாகத் திரும்பிவரும்வரை நாள்தோறும் அவனுக்காக நான் செபமாலை செபிப்பேன்; அந்தஅன்னையின் உதவியைக்கேட்ட எவருமே அடையாமற்போனதில்லை" என்றேன்.

"மானிட அனுதாபமும், ஆலோசனையும் நமக்குத்தேவையாயிருக்கையில், நம்மைப்போல் துன்பப்பட்டவர்களை நாம் அணுகுகிறோம்; எனக்கும் ஒரே மகன்; அந்தஅன்னைக்கும் ஒரே மகன்; எனக்கு வரவிருக்கும் கவலையும், துயரமும் அவள் அறியாததல்ல; "ஒருமுறை நீர் உமதுமகனை இழந்தீர்; அப்பொழுது உமதுமகன் என் மகனைவிட வயதில்குறைந்தவர்; அவர் அகப்படும்வரை நீர் எவ்வளவு கவலைப்பட்டீர்; பின்னர் நீர் அவரை விரோதிகள் நிறைந்த இடத்துக்கு அனுப்பிவைத்தீர்; எத்தனைமுறை அவர் பசியாயிருந்தார்; தலைசாய்க்க இடமின்றி இருந்தார்; உமது மகன் எப்பொழுதும் நன்மையே செய்தபோதிலும் மனிதர் அவருக்கு இடையூறாகவே இருந்தனர்; கடைசியாக நீர் அவரருகில்நின்று, அவர் உயிர்விடுவதைப் பார்த்தீர்; உமது மகனைக் காப்பாற்றமுடியாத நிலையில் நீர் நின்றீர். ஆனால், என்மகனைக் காப்பாற்றும்வல்லமை உம்மிடம்உண்டு; தாயே, என்மகனைப் பாதுகாத்துக்கொள்ளும்; அவனைப் பத்திரமாய் வீடுகொண்டுவந்து சேர்ப்பீராக; நான் உயிர்விடும்வரை உமது மகனை நேசித்துச்சேவிப்பேன்" எனப் பிரார்த்தித்தேன்.

பசிபிக்சமுத்திரத்தில் பயங்கரயுத்தம். எனினும்நான் அவநம்பிக்கைப்பட்டதில்லை. இரவில் எப்பொழுதும் நல்லதூக்கம் எனக்கு. ஏதோ நேரிட்டதுபோல் அல்லது நேரிடப்போவதுபோல் ஒருநாள் எனக்குப் பயம்உண்டாயிற்று. மூன்று

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# வேதசாட்சியான பன்ரலீயன்

அக்காலத்திலே ரோமை இராச்சியத்தைச்சேர்ந்த நிக்கோமீடியாநகரில் பன்ரலீயன்என்னும் ஓர் அஞ்ஞான வாலிபர் கல்விபயின்றுவந்தார். அவர் வைத்தியகல்வியில் பெரும்புகழ்பெற்று வைத்தியரானார். அவரதுதிறமையைப் பற்றிக் கேள்வியுற்ற ரோமைசக்கரவர்த்தியான மக்ஸிமிலியன் தனது அரண்மனைவைத்தியனாக அவரை நியமனஞ்செய்தான்.

அவ்வாறாக ஒருநாள் பன்ரலீயன் தற்செயலாகத் தேவபக்திநிறைந்த ஓர்கத்தோலிக்க குருவானவரைச் சந்திக்க நேர்ந்தது. அக்குருவானவரின்பெயர் ஹேமோலாவுஸ். அவர் தமதுசம்பாஷணையின் ஆரம்பத்திலே, அவ்வைத்தியர் நாடிக்கற்ற வைத்தியகல்வியின் மகிமையைப் பெரிதும் பாராட்டினார். பின்பு சற்றேகதையைமாற்றி, "எனது அரியநண்பரே! நீர் வைத்தியகல்வியால் அடைந்திருக்கும் புகழைக் கொண்டு கடைசியாகத் தாம்அடையப் போகும் பலன்என்ன? உமதுஆத்தும இரட்சணியத்திற்காக ஏலவேதானே என்ன ஒழுங்கு செய்திருக்கிறீர்?" என்று வினவினார். சுவாமியார்கூறிய மொழிகள் வைத்தியரை ஆழ்ந்து யோசிக்கச்செய்தன. அவர் சுவாமியாருடன் அளவளாவிச் சம்பாஷிக்கலானார். நீடியசம்பாஷணையின் விளைவாகச் சுவாமியார் முக்கியமானவிசுவாச சத்தியங்களை அவருக்கு விளக்கினார். ஈற்றில் வைத்தியர் சுவாமியாரை நோக்கி: "ஒருவன் உண்மையான மனச்சமாதானத்தையும், இன்பத்தையும் அடையவேண்டுமானால் கிறீஸ்தவனாகிக் கிறீஸ்துநாதரின் போதனைப்படி நடப்பதே உசித"மென்றுகூறினார்.

சிறிதுகாலத்தின்பின் ஓர்நாள் பன்ரலீயன் வீதிவழியே உலாவிவரும்போது ஒருபிள்ளை விஷசர்ப்பந்தீண்டி இறந்து கிடக்கக்கண்டார். கண்டதும் மனதில் எழுந்த ஓர்ஏவுதலினால் தூண்டப்பட்டு அப்பிள்ளையின்கிட்டப்போய் "கிறீஸ்துநாதர்போல் உயிர்பெற்று எழுந்திரு" என்றார். இறந்துகிடந்த அப்பிள்ளை அக்கணமே உயிர்பெற்றெழுந்தது. இச்சம்பவம் அவருக்குப் பெரும்பரவசத்தை உண்டுபண்ணியது. உடனே அவர் ஹேமோலாவுஸ்என்னும் குருவானவரிடம்சென்றார். ஞானஸ்நானம் பெற்றுக் கத்தோலிக்கரானார்.

பன்ரலீயன்கொண்ட இன்பத்துக்கு எல்லையேயில்லை. ஆயினும தாம் அடைந்தஇன்பத்தைத் தமது வயோதிகதந்தையும் அடையவேண்டுமென ஆசித்தார். இந்தஆவல் அவரைமிகவும் வாட்டிவந்தமையால் அவர்முகத்தில் கவலைக்குறிகள் தோன்றின. இதைக்கவனித்த அவர்தந்தை அவரை நோக்கி: மகனே, நீகவலையுற்றிருக்கக் காரணமென்ன?" என்றுகேட்டார். அதற்கு பன்ரலீயன் மறுமொழியாக: "அரியதந்தையே! நாங்கள் கைக்கொண்டுவரும் சமயத்தின் தப்பறைகள்தான் என்னே! எங்கள்தேவர்கள் மனிதர்களாய் இருந்தனராயின் பின்பு அவர்கள் எவ்விதம் தேவர்களாகமுடியும்? அம்மட்டா! சட்டிபானைகள் செய்யப்படும் அதேக்களிமண்ணைக் கொண்டுதானே நாங்கள் வணங்கிவரும் விக்கிரகங்களும் செய்யப்படுகின்றன. இவ்விதம் அமைக்கப்பட்டுள்ள விக்கிரகங்களைத் தெய்வங்களாகக்கருதி நாங்கள் எவ்விதம்வணங்கலாம்? இவைகள் உண்மையில் பார்வையற்ற சிலைகளேயன்றி வேறென்ன? என்றுசொன்னார். இதனை மிகவும்பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்த அவர்தந்தை ஆழ்ந்துயோசித்தார். மைந்தர் கூறியதெல்லாம் அவர்மனதில் நன்றாகப்பதிந்தது. என்றாலும் உடனடியாக எந்தவிதமான ஒருதீர்மானமும் எடுக்காது கூர்ந்துஆலோசித்துவந்தார்.

ஆயின் சிறிதுகாலத்தின்பின் நிகழ்ந்த ஓர்சம்பவம் அவரைமுற்றாக மனந்திருப்பிக் கத்தோலிக்கதிருமறையில் சேரப்பண்ணியது. அதாவது, ஒருநாள் பன்ரலீயன் வீட்டில்இருந்தபோது தனதுகண்பார்வையை முற்றாக இழந்த குருடன்ஒருவன் அவரிடம் வந்து தனதுகண்கள் திரும்பவும் பார்வையையடைய ஏதாவது ஓர் மருந்து தரவேண்டுமென்று அவரை இரந்துவேண்டினன். அவரோ அவனதுபார்வையை மறுபடியும் அருளக்கூடிய மருந்தொன்றும் இல்லாததால் அவன்முன்சென்று நின்றுகொண்டு "யேசுக்கிறீஸ்துநாதரது திருநாமத்தின்வல்லமையால் நீ பார்வை அடைவாயாக" என்று சொன்னார். அவ்வாறு சொன்னதே அவன் பூரணபார்வை அடைந்தான். இப்புதுமையைக்கண்ட அவர்தந்தை பெரிதும் ஆச்சரியவசத்தரானார். பார்வைஅடைந்த மனிதனும், இப்புதுமையைக் கண்ணாரக்கண்ட அவர்தந்தையும் ஞானஸ்நானம்பெற்றுக் கத்தோலிக்கராயினர்.

முன்கூறியவைபோன்ற அநேக புதுமைகளைப் பன்ரலீயன் செய்வதையும், அவர் கத்தோலிக்கசமயத்தைத் தழுவியதையும் மக்ஸிமிலியன் சக்கரவர்த்தி அறிந்தான். கடுங்கோபம் அடைந்தான். பன்ரலீயனாலே பார்வையடைந்த அம்மனிதனை அழைப்பித்து நடந்தசம்பவத்தை விசாரித்தான். அவனும் தான்பார்வையடைந்த விதத்தையும், தான் கத்தோலிக்கனாகி விட்டதையும் ஒன்றும்ஒழியாது எடுத்துக்கூறினான். இதைக்கேட்ட சக்கரவர்த்தி இச்சம்பவம் ஊரிலே பரவாதிருக்கும் நோக்கமாக, "இப்புதுமை எமது தேவர்களின் சலுகையால் நிகழ்ந்ததேயன்றி யேசுவால் நடந்ததல்ல"வென்று சொன்னான். அப்போது முன்னர் குருடனாயிருந்த அம்மனிதன் மறுமொழியாக: "அரசே! தாங்கள்கூறுவது முற்றும் உண்மைக்குவிரோதமாகும்; தாமேகுருடராயிருக்கும் எமது தேவர்கள் குருடனாயிருந்த எனக்கு எவ்விதம் பார்வை அருளமுடியும்?" என்று நவினமாகச் சொன்னான். இதைக்கேட்டுநின்ற சக்கரவர்த்தி அடங்காக் கோபங்கொண்டவனாய்க் காவலர்களைவிழித்து: "இத்துரோகியை உடனேதானே வெளியிற் கொண்டுபோய் இவன்சிரசைத் துண்டித்துவிடுங்கள்" என்று ஆஞ்ஞாபித்தான். கொலைஞர்களும் அரசகட்டளையை நிறைவேற்றிவிடவே அவன் வேதசாட்சியாயினான்.

அதன்மேல் சக்கரவர்த்தி பன்ரலீயனை அழைப்பித்துத் தன்முன்நிறுத்திக்கொண்டு: "ஓ, நன்றிகெட்டவனே! நான் உனக்குவழங்கிய மகிமைப்பட்டங்களும், செல்வஞ்செல்வாக்குகளுந்தானா இப்படியெல்லாம் நீ கத்தோலிக்கமறையைத் தழுவச்செய்தன?" என்று மிகுந்தகோபத்துடன் முழங்கினான். அதற்குப் பன்ரலீயனார் உத்தாரமாக: "மன்னாதிமன்ன! தாங்கள் என்மேல்பாராட்டிய அன்புக்கும், காட்டியகருணைக்கும் நன்றிகெட்டவனாய் நான் மாறவுமில்லை, மாறப்போவதுமில்லை; ஆனால், தாங்கள் கையெடுத்துவரும் தெய்வங்களின் பூர்வாங்கவரலாறு தங்கட்குத் தெரியாதனவல்ல. அவைகளின் துன்மார்க்கநடத்தைகளையும், அவைகளின் சிற்றின்பநாட்டங்களையும், மற்றும் அக்கிரமங்களையும் நாம் பூரணமாக அறிந்துகொண்டும் அவைகளைத் தேவர்களெனமதித்து எவ்விதம் அவர்களைக் கையெடுத்து வணக்கம்செய்ய முடியும்? ஓஅரசே! தேவன் ஒருவர்மாத்திரமே உளர்; அவரே கிறீஸ்தவர்களால் மிகுந்தஅன்புடனும், பெரும் பூச்சியத்துடனும் வணங்கப்பட்டுவரும் தேவாதிதேவனாகிய யேசுக்கிறீஸ்துநாதர்; நான்சொலும் இதன்உண்மையை அத்தாட்சிப்படுத்த எதுவேண்டுமானாலும், உமது கட்டளைப்படிசெய்ய இதோ! ஆயத்தம்; எச்சமய தேவர்களாலும் செய்யமுடியாதென விடப்படும்எதையும் எனது யேசுஇரட்சகரின் திருநாமத்தால் செய்துவைக்க முடியுமென்பதை அத்தாட்சிப்படுத்த இதோ முற்றும் ஆயத்தம்" என்றார்.

(தொடரும்)

— M. S. M. —

# லாவோஸ் நாட்டிலே

வியட்நாமின் கம்யூனிஸ்தர்கள் யாதோர் முகாந்திரமுமின்றி லாவோஸ் நாட்டின்மீது ஆக்கிரமிப்புப் போர் தொடங்கியுள்ளனர். லாவோஸின் தலைநகரான லுவாங் பிரபாங்குக்கு ஆபத்து அதிகரித்துள்ள இப்போது முழுவரலாற்றையும் கவனிக்கவேண்டும். 1946-ம்ஆண்டு முதற்கொண்டு வியட்நாம் கம்யூனிஸ்தர்கள் நடத்திவரும் ஆக்கிரமிப்பின் விஸ்தரிப்பே இதுவாகும். வியட்நாம் அரசாங்கம் சட்டசம்மதமானமுறையில் ஸ்தாபிக்கப்பட்டதாகும். குழப்பத்தையே குறியாகக்கொண்ட கம்யூனிஸ்தர்கள் மஸ்கோவில் பயிற்சிபெற்ற ஹோ—சி—மின் தலைமையில் அதிஉக்கிரமமான போரில் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

இதுவரை வியட்நாம் கம்யூனிஸ்தர்கள் நடத்திவந்தபோர் உள்நாட்டுப் போராகவே இருந்துவந்தது. இப்போது அவர்கள் லாவோஸைத் தாக்கத் தொடங்கியிருப்பதிலிருந்து அது சர்வதேசபோராகப் பெருகியிருக்கிறது. கம்யூனிஸ்தஅகிலம் வியட்நாம் கம்யூனிஸ்தர்களுக்கு ஊக்கமும்உதவியும் அளித்துவருகின்றது. இரும்புத்திரைக் கிழக்குஐரோப்பாவில் உற்பத்தி செய்யப்பட்ட ஆயுததளவாடங்கள் இந்தக்கம்யூனிஸ்த கலகக்காரர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அவைகள் கொஞ்சநஞ்சமல்ல, ஏராளமானவை.

வியட்நாம் கம்யூனிஸ்தர்கள் தங்கள் எல்லையைத்தாண்டி லாவோஸ்மீது படையெடுத்துள்ளனர். லாவோஸ் ஓர் தனிநாடு. அது வியட்நாம் அரசாங்கத்தினின்றும் வேறுபட்டது. இரண்டுக்கும் நேரடியான தொடர்புகிடையாது. அதேபோல்கம்போடியாவுக்கும் லாவோஸுக்கும் தொடர்புஇல்லை. கம்போடியா பக்கத்திலுள்ளநாடு.

இரண்டாவது மகாயுத்தத்துக்கு முன் கம்போடியா, லாவோஸ், வியட்நாம் மூன்றும் பிரான்சியஇந்துசீன குடியேற்றநாடு என்று அழைக்கப்பட்டுவந்தன. யுத்தத்துக்குப்பிறகு இவைகள்முற்றாகத் தனித்தனிநாடுகளாகப் பிரிந்துவிட்டன. இவைகள் ஒவ்வொன்றும் பிரான்சிய ஐக்கியத்துடன் இணைந்துள்ளது. இவற்றிற்குள்ளதொடர்பைவிளக்க உதாரணமாக, பிரித்தானிய சாம்பிராச்சியத்திலே ஆஸ்திரேலியாவும், நியூசிலாந்தும் என்னஉறவு கொண்டுள்ளனவோ அதைக்குறிப்பிடலாம். எனவே, லாவோஸ் தனித்த, பூரண சுதந்திரமாக இயங்கும்அரசு. அதன்மீது கம்யூனிஸ்தர்கள் வலுத்தாக்குதல்தொடுத்திருப்பது ஆக்கிரமிப்பு விஸ்தரிப்புத்தான். இதில்சந்தேகமில்லை.

லாவோஸ் ஆசியாவில் ஒரு சிறியநாடு. அங்கே பத்துலட்சம்பேர் வசிக்கிறார்கள். பௌத்தர்களுடையநாடு. மலைப்பாங்கானநிலம். தலைமுறைதலைமுறையாக இந்தச்சனங்கள் அமைதியாக வாழ்க்கைநடத்தி வருகிறார்கள். இவர்களை "விடுவித்து" அங்கே "மக்கள்குடியர"சை நிறுவப்போவதாக வியட்நாம் கம்யூனிஸ்தர்கள்—மஸ்கோதாசர்கள் ஆசைமொழிகள் பேசுகிறார்கள்.

லாவோஸ்மக்களை "விடுவிக்கும்படியான" நிலைமை என்ன அப்படிவந்துவிட்டது? அவர்களின் அபிப்பிராயத்தைக் கேட்டறியவேண்டாமா? அவர்கள் "மக்கள் குடியாசு" வேண்டும் என்று கம்யூனிஸ்தர்களைக் கேட்டார்களா? இல்லையே. பின்என்ன? கம்யூனிஸ்தர்கள் தங்களுக்குத்தாங்களே "விடுதலையாளர்" என்று பட்டம்சூட்டிக்கொண்டு மக்களை ஏமாற்றும் சூதுதான்இது.

மஸ்கோவின் கையாட்களான கம்யூனிஸ்தர்கள் ஐரோப்பாவில் இதேமாதிரிச் சாகசத்தினாலும், பசப்பினாலும் ஜனநாயக அரசாங்கங்களைக் கவிழ்த்துச் சர்வாதிகாரத்தை, கம்யூனிஸ்த கொடுங்கோலை நாட்டினார்கள். ஆசியாவிலும் அந்தத்தந்திரத்தை அவர்கள்கையாள ஆரம்பித்திருக்கிறார்கள்.

லாவோஸ்நாடு கேந்திரமான இடத்தில் அமைந்திருக்கிறது. பர்மா, சியம் எல்லையை ஒட்டியுள்ளது. அதனால்தான் கம்யூனிஸ்தர்களுக்கு அதன் மேல் கண்விழுந்திருக்கிறது. லாவோஸ் நாடு தென்கிழக்காசியாவின் இதய பாகத்தில் இருக்கிறது. அதைப் பிடித்துக்கொண்டால் கம்யூனிஸ்தர்கள் தங்கள் நாடுபிடிக்கும் திருவிளையாடல்களைப் பர்மா, சியம்நாடுகளிலும் நடத்தலாம்எனத்திட்டம்போட்டுள்ளார்கள்.

லாவோஸ்நாட்டில் மீக்காங் ஆறு ஓடுகிறது. அது விசேடஅனுகூலம் அளிக்கிறது. திபேத்தில் உற்பத்தியாகி நெடுந்தூரம்ஓடும் இந்தநதி போக்குவரத்துக்கும், இயற்கைஎல்லை என்ற பாதுகாப்புக்கும் பெயர்பெற்றது. கம்யூனிஸ்தர்களுக்கு இந்தக் கேந்திரமான இடத்தின்மீது ஆசைவிழுந்திருப்பதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது? அதனால்தான் வலுத்தாக்குதல் தொடக்கியிருக்கிறார்கள். கம்யூனிஸ்தர்களின் இந்தஆக்கிரமிப்பு அவர்களுடைய ஏகாதிபத்திய விஸ்தரிப்புத்திட்டத்தில் ஒருபகுதிஎன்பதை மறக்கக்கூடாது. ஒருபக்கம் சமாதானப் பேச்சுப் பேசிக்கொண்டு, மறுபக்கம் சமாதானத்துக்கும், சுதந்திரத்துக்கும் உலைவைக்கும் கம்யூனிஸ்தர்களின் போக்கு புதியதல்லத்தான்.

கம்யூனிஸ்தர்கள் விடுதலை, விடுதலை என்று காடியாகக்கத்துவதில் கடுகளவும் உண்மைஇல்லை என்பதைச் சுதந்திரஉலகம், ஏன் அடிமைப்பட்ட உலகமக்களுந்தான் நன்றாக அறிவார்கள். பல்கேரியாவின் கதிஎன்னவாயிற்று? செக்கோசிலவாகியா, போலாந்து, அல்பேனியா, ரூமேனியா, சீனா, வடகோறியா இங்கெல்லாம் என்னநடந்திருக்கிறது? கம்யூனிஸ்தர்கள் தடபுடலான "மக்கள் குடியாசு" என்ற கோஷத்தைஎழுப்பி விடுதலையாளர்என்று வேஷத்தைப்போட்டு, மக்கள்விடுதலை, சுயேச்சை அனைத்தையும் பறிமுதல்செய்து பொலிஸ் கெடுபிடிஆட்சியை—பயங்கர ஆட்சியை நடத்துகின்றனர். கம்யூனிஸ்தஆட்சியில் முதற்பலி மக்கள்சுயேச்சைதான்.

---

— ரூஷியசோவியற்அரசின் ஆதிக்கத்திலுள்ள கிழக்குஜேர்மனியிலே தற்போதுகுறைந்தபட்சம் ஒருலட்சம்ஜேர்மனியர் ஆயுதபாணிகளாய் இருப்பதாகக் கண்டறியப்பட்டிருக்கிறது. இவர்களில் ஆறாயிரம்பேர் ஆகாயப்படையையும், நாலாயிரம்பேர் கடற்படையையும், ஒன்பதினாயிரம் பேர்வரையில் தரைப்படையையும் சேர்ந்தவர்களாம்.

— ஓர்பிரித்தானிய கன்பெறாஜெற் வெடிகுண்டுவிமானம் சென்றவெள்ளியன்று உலகில் எந்தவிமானமும் பறந்திராதவிதமாய் ஆகாயத்திலே அதிகம் உயரப்பறந்து பிரஸ்தாபம் பெற்றிருக்கிறது. அது பறந்துசென்றஉயரம் 63,668அடி. இதற்குமுன் அதிகம் உயரச்சென்றவிமானம் பறந்தஉயரத்திலும் இது 4,222 அடி கூடியதாகும்.

# கத்தோலிக்க சமாச்சாரம்

## பாலைவனத்திடையே பசுந்தரை

உலகில் மகாப்பலன் தரும் கத்தோலிக்கமிஷன்களமாக மத்தியஆபிரிக்காவின் பெரியவாவிகளுள்ளபகுதி திகழவிருக்கிறது. எழுபது வருடங்களுக்குமுந்திய உலகப்படங்களிலே ஆராய்ச்சி செய்யப்படாத பகுதியென்று இது குறிக்கப்படலாயிற்று. அங்கு உகண்டாவில் மாத்திரம் இப்போது 10 லட்சம் கத்தோலிக்கருக்குமேலும், கத்தோலிக்கராகுமாறு ஆயத்தஞ்செய்வோராய் 1 லட்சம்பேரும் இருந்துவருகின்றனர். 133 சுதேசகுருமார், 700 சுதேச கன்னியாஸ்திரீமாரைக்கொண்ட இந்தநாடு ஆபிரிக்க மிஷன்நாடுகளின் பவளமாக விளங்குகின்றது. றுவன்டா-உருண்டிநாடுகளும் இப்போது 10 லட்சம்பேருக்கு மேல் கத்தோலிக்கரைக் கொண்டுள்ளன. ஓர்காலம் அடிமைவியாபாரத்துக்குக் கிழக்குஆபிரிக்க தலையிடமான தங்கனைக்காநாட்டில் 8 லட்சம் கத்தோலிக்கரும், கத்தோலிக்கராகுமாறு ஆயத்தஞ்செய்வோராய் 90ஆயிரம்பேரும், 134சுதேச குருமாரும், 473 சுதேசகன்னியாஸ்திரீமாரும் உள்ளனர். இந்தப் புதியகிறீஸ்தவர்கள் தங்கள் சொந்த வேதசாட்சிகளையும், சுதேசமேற்றிராணிமார்களையும், சுமார் 400 சுதேசகுருமாரையும், றுவான்டானஎன்ற முதற் கிறீஸ்தவ நாட்டையும் கொண்டிருக்கிறார்கள்.

## பேர்நதேத்தின் அழியாச்சரீரம்


தமது ஐரோப்பிய யாத்திரையின்போது மகாவந். சேலம் மேற்றிராணியாண்டவர் லூர்துபதியில் மாதாவின் திருக்காட்சி பெற்ற பெர்நதெத்அம்மாள் வசித்தமடத்தைத் தரிசித்தது பற்றிப் பின்வருமாறு எழுதியிருக்கிறார்—"பாரெலெமோனியாவிலிருந்து பரீஸ்நகருக்குத் திரும்பிப்போக றெயிலேறினோம். நடுப்பகல்வேளை வழியிலே பிறர்சிநேகசபைக் கன்னியர்களின் தாய்மடத்தைப் பார்க்க நெவெரில் இறங்கினோம். அர்ச். பெர்நதெத்அம்மாள் கன்னியாஸ்திரீயாகச்சீவித்துமரித்த மடம் இதுதான். இங்குதான் அவளுடைய அழியாதசரீரத்தை ஓர் அழகியபெட்டியில் பத்திரப்படுத்தி மடத்துக்கோவிலில் வைத்திருக்கிறார்கள். அடுத்த றெயின்வண்டி 3 மணிக்குச் செல்லவிருந்ததால் இந்தஅர்ச்சியசிஷ்டவளின் ஞாபகார்த்தங்கள் நிறைந்த மடத்தைத் தரிசிக்க எமக்கு 3மணிநேர அவகாசமிருந்தது. அர்ச். பெர்நதெத் அம்மாளின் அறை, அவள் வேலைசெய்த இடங்கள், வியாதியாய்ப்படுத்திருந்த அறை, அவள் கடைசிமூச்சுவிட்ட சோபா, கோவிலில் அவளுடையஇடம், கடைசியாய் அற்புதமாக அழியாமலிருக்கும் அவளுடைய சரீரம் ஆதியவைகளையெல்லாம் எமக்குக் காண்பிக்கும்படி சிரேஷ்டதாயார் ஓர் துணைச்சகோதரியை அனுப்பினார். இயற்கையான நிறம்மாறாமல் அயர்ந்துநித்திரை செய்வதுபோலிருக்கும் அர்ச்சியசிஷ்டவளின்முகமானது அவளுடைய பாதவடிகளில் செபிக்கவருகிறவர்களின் சங்கைமரியாதையையும், பரலோகநினைவையும் தூண்டுகின்றது. இவளைப் போன்ற சாதாரண மாசற்ற ஆத்துமங்களைக்கொண்டு கடவுள் எப்பேர்ப்பட்ட அதிசயங்களைச் செய்கிறார். சகோதரி மேரிபெர்நாந்தென்று தனது சபையினரால் அழைக்கப்பட்ட பெர்நதெத் அம்மாளின் சீவியமும், மரணமும் கடவுளின்வல்லமைக்கும், இரக்கத்திற்கும் ஓர் அத்தாட்சியாகும். நெவெரிலுள்ள அவளுடைய புண்ணிய க்ஷேத்திரத்திற்கு வரும் ஒவ்வொருவருக்கும் அவள் லூர்துகெபியில் தேவதாய் உலகிற்கறிவித்த பரலோகசெய்தியை இன்னுமே ஞாபகமூட்டிக் கொண்டு வருகிறாள். மடத்தை விட்டுப்பிரியுமுன் சிரேஷ்டதாயார் இப்புண்ணியவதியின் சீவியவரலாறுஅடங்கிய பிரான்சியபுத்தகம் ஒன்றையும், திருப்பண்டத்தையும் ஞாபகசின்னமாக எமக்குத்தந்தார்."

## கருதினலில் கைவைத்தவர்கள்

ஹங்கேரியிலே கம்யூனிஸ்த அரசாங்கத்தால் சிறைவைக்கப்பட்டுள்ள கருதினல் மின்ட்சென்றிஆண்டவரைக் கைதுசெய்து குற்றவிசாரணைநடத்துவதிலும், அவரைக் குற்றவாளியென்று காணுவதிலும் ஈடுபட்டிருந்த ஹங்கேரியகம்யூனிஸ்த அதிகாரிகளில் குறைந்தபட்சம் 19 பேர் இதுவரையில் மரண தண்டனைபெற்றும், நாடுகடத்தப்பட்டும், பிறவிபரீத சந்தர்ப்பங்கள்ஏற்பட்டும் மறைந்துவிட்டார்களென றோமைநகரிலுள்ள அரிஎனும் இத்தாலிய செய்திஸ்தாபனம் அறிவிக்கின்றது. இவர்களில் ஒயூலா டெக்ஸி என்ற பொலிஸ் கேர்ணல் பிந்த அந்நாட்டு நீதிமந்திரியாயினன். இவன் ஐக்கியஅமெரிக்கதேசத்துக்காக உளவுபார்த்தான் என்ற குற்றச்சாட்டின்பேரில் கைதுசெய்யப்பட்டான். கருதினலாண்டவரைக் கைதுசெய்த பொலிஸர் 16பேரிலும் ஒருவன் மாத்திரமே தப்பியோடக்கூடியவனுனன். இரகசியப் பொலிஸ் கேர்ணலான ஒயுலா ஒஸ்கோ என்பவன் ஹங்கேரியிலிருந்து தப்பியோட முயன்றபோது சுடப்பட்டான். பியெடர்மன் எனப்பெயரிய மற்றோர் இரகசியப் பொலிஸ் கேர்ணல் புடாபெஸ்ற்நகரிலுள்ள அன்டூசி வீதியிலுள்ள சிறைச்சாலையில் மாண்டுபோயினன். கருதினலாண்டவரில் சுமத்திய அநீத குற்றவிசாரணையை ஆயத்தப்படுத்தத் துணைச்செய்த இரகசியப்பொலிசரில் அநேகர் தங்கள் குடும்பங்களுடன்சைபீரியாவுக்கு நாடுகடத்தப் பட்டிருக்கின்றார்கள்.

# பாத்திமாகிரி ஆனி 7-ந் திகதி

## வருத்தக்காரரை ஆசீர்வதிக்கும் திருச்சடங்கு




JACINTHA ON HER DEATH BED

பாத்திமாகிரியிலே முந்திய வருடங்களிற்போல ஆனிமாதம் 7-ந் திகதியன்று வருத்தக்காரரை ஆசீர்வதிக்கும் திருச்சடங்கு நடைபெறும். 1950-ம் ஆண்டு இந்த நாளிலேயே பாத்திமா மாதாவின் திருச்சுரூபம் இங்கே கொண்டுவரப்பட்டது என்பதை நாம் மறக்கக்கூடாது. அந்தநாள் பெரிய ஆசீர்வாதமான நாளாய்இருந்தது. அது முதல் ஒவ்வோர் வருடமும் இந்த ஞாபகார்த்த நாளிலே விசேஷவிதமாய் மன்றாடி, ஒவ்வோர் வருடமும் அந்த 50-ம் ஆண்டில்பெற்ற வரப்பிரசாதங்களைத் தொடர்பாகப் பெறுவோம். இவ்வருடம் ஆனிமாதம் 7-ந் திகதி ஞாயிற்றுக்கிழமையிலே வருகிறது. அன்று எங்கள் மகாவந். மேற்றிராணியாண்டவர் வருத்தக்காரரை ஆசீர்வதிக்க வருவார். இத்திருச்சடங்கு அன்று பின்னேரம் 4-30 மணிக்குத் தொடங்கும். இந்த ஆசீர்வாதத்தைப்பெற விரும்புகிறவர்கள் கூடியசீக்கிரம் நமக்கு ஓர் கடிதம் அனுப்பி வைப்பார்களாக. அக்கடிதத்திலே தங்கள் வருத்தததையும், அதன் குணங்களையும் அறிவித்தல் நன்று. ஏலவே, அறிவித்திருக்கும் வருத்தக்காரருக்கு இடம் ஆயத்தம் பண்ணுவோம்.

Henri Gesland, O. M. I.
கட்டளைக்குரவர்

## இராணியானார்

1. போரினில் கொல்வாரில்லாப் பொலிவுருக் கோலியாத்தை
நேரினில் நின்றுகல்லால் நெற்றியி லெற்றிவீழ்த்தித்
தாரினில் வெற்றிவாகை சூடிய தாவீதென்னுஞ்
சீரினன் வழியால்தாயார் சிறந்திடும் இராணியானார்

2. கோத்தொழு குடிசையாகக் குலேந்தவை அணையதாகப்
பூத்தெழும் அருணனென்னப் பூரணன் பிறந்தபோது
மூத்தொளிர் அறிவின்மிக்க மும்முடியரசர் தாழ்ந்து
ஏத்திட விறைவன்தாயார் எவர்க்குமே இராணியானார்

3. மன்னுயிர் புரந்துவையம் படைத்தவன் தாயார்மண்ணில்
இன்னுயிர் நீத்துப்பின்னை ஈடிலா வனப்புவாய்ந்த
தன்னுயர் உடலோடான்மா தழைத்திட எழுந்துவானில்
பொன்னுயர் முடியைச்சூடிப் பொன்றிடா இராணியானார்

4. இளம்பிறைத் திங்கள்பாதம் இறைஞ்சிட இரவியென்னும்
வளம்பெறும் ஒளியான்வந்து வதனத்தே வணங்கிநிற்பத்
தளர்விலா வாறிரண்டு தாரகை முடியாய்ச்சூழ
அழகெலாந் திரண்டுதாயார் அனைவர்க்கும் இராணியானார்

"யுவன்" காம்பொன்

## தாயன்பின்மிக்க தேவதாய்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இரக்கமுள்ள தாயே, உமது அடைக்கலமாக ஓடிவந்து உமது உபகார சகாயங்களை இரந்து மன்றாடின ஒருவனாகிலும் உம்மால் கைவிடப்பட்டதாக ஒருபோதும் உலகில் சொல்லக் கேள்விப்பட்டதில்லை." நமக்கு வரும் ஒவ்வொரு வரப்பிரசாதமும் தேவதாய் வழியாகவே வருகிறதென்று திருச்சபை போதிக்கிறது. எனவே, நம்மைப் படைத்துக் காப்பாற்றிவரும் இறைவன்மட்டில் நாம் நம்பிக்கை கொள்வதுபோல நமது பரலோக அன்னையின் உதவியிலும் தளராதநம்பிக்கை கொள்ளுதல் முறையன்றோ!

தேவதாய் நம்தாய். பெற்ற தாயினும் பன்மடங்கு அன்புடைய தாய். அவள்வழியாகவே சகல தேவவரங்களும், உதவி ஒத்தாசைகளும் நம்மை வந்தடைகின்றன. இவ்விதம் 'தாய்' என்ற முறையிலும், 'வரப்பிரசாதத்தின் வாய்க்கால்' என்ற முறையிலும் அவள் நமது அன்புக்குப்பாத்திரமானவள். எனினும் அவளது அன்பின் தன்மையை உணராது உலக சிருட்டிகளின்மேல் தகாத அன்பு கொண்டிருப்போமானல், நமது தவறை உணர்ந்து அன்னையின் அன்பில்வளர ஆவனசெய்வோம். நிழல்போல மறையும் நிலையற்ற உலகபொருட்களின் அன்பில் ஆசைகொள்ளாது நிலையுள்ள அன்பின் இருப்பிடமான தேவனிடம் நம்மை இழுத்துச்செல்லும் தேவதாயின் அன்பில் ஆசைகொள்வோம். நாம் அவளை நேசிக்கிறோம் என்பதை நமது கிரியைகளில் காண்பிப்போம். அவளுக்குகந்த புண்ணியங்களை நாமும் அனுசரிப்போம்.

## வைகாசி மாதம்

போதுக்கருத்து:- சினிமாப்படக் காட்சிகளினால் விசுவாசத்திற்கும், ஒழுக்கத்திற்கும் ஏற்படும்அபாயங்கள் நீங்கும்படியாக வேண்டிக்கொள்வது.

மிஷன்கருத்து:- வட இந்தியாவிலே திருச்சபை செழித்துவளரும்படியாக மன்றாடிக்கொள்வது.

## திருநாள் அட்டவணை

வைகாசிமாதம்—1953

| | | | |
|---|---|---|---|
| வெ | 15 | அ. டெலாசால் அருளப்பர், கு. | (வெ) |
| சனி | 16 | அ. உபால்தப்பர், த. | (வெ) |
| ஞா | 17 | ஆரோகண அட்டகஞாயிறு— அ. பஸ்கால் பயிலோன், வே. | (வெ) |
| திங் | 18 | அ. வெனஞ்சியார், வே. | (சி) |
| செ | 19 | அ. செலஸ்தீனு இராயப்பர், பா. | (வெ) |
| புத | 20 | அ. சியென் பெர்நர்தீனு, து. | (வெ) |
| வி | 21 | அ. ஒஸ்பிசியார், த. | (வெ) |

சத்தியவேத

# பாதுகாவலன்

1953-ம் ஆண்டு
வைகாசி மாதம் 14-ந் திகதி

## அபாயம் ஏற்படுமா?

கோறிய யுத்தநிறுத்த சம்பாஷணை மீளவும்ஆரம்பமாகி இதுவரை பலதினங்களாக நடைபெற்றுள்ளபோதிலும் அவற்றிலே எடுத்துப்பாராட்டத்தகுந்த எத்தகைய நன்மையும் ஏற்பட்டிருப்பதாயில்லை. காலந்தான் வாளா கழிந்துகொண்டிருக்கின்றது. தங்கள் தாய்நாட்டிற்குச் செல்லவிரும்பாத யுத்தகைதிகளைப்பற்றிய பிரச்சினையிலே காலந்தாழ்த்தப்பட்டு வருகிறது. இதிலிருந்து கம்யூனிஸ்தர்கள் உள்ளபடியே யுத்தத்தைநிறுத்த விரும்புகிறார்களென்று கொள்வதற்கான அறிகுறியாதொன்றுமே காணப்படுவதாயில்லை. கோறியயுத்தநிறுத்த சம்பாஷணையில் ஈடுபட்டுள்ள கம்யூனிஸ்த கோஷ்டி நாளைநாளையென்று தவணைபோட்டு நாளைஇழுத்துத் திருவிளையாடல்நடத்திக்கொண்டிருக்க, இந்துசீனவைச்சேர்ந்த வியற்னம்நாட்டிலே வியற்மின் இயக்க கலககாரர்கள் கம்யூனிஸ்தர்களுடன் கம்யூனிஸ்தர்களாய் அயலிலுள்ள லாவோஸ் நாட்டின்மீது படையெடுத்திருப்பதானது சனநாயகநாடுகளுக்கெல்லாம் பெரிதும்வியப்பை உண்டுபண்ணியிருக்கின்றது. லாவோஸ் நாட்டிலே கம்யூனிஸ்தர்கள் கால்வைத்திருப்பதானது—அதனை ஆக்கிரமிக்க முனைந்திருப்பதானது—சமாதான விஷயமாய்ப் புதிய சோவியற் தலைவர்களின் சமாதான கோரிக்கையிலும், கோறியயுத்தநிறுத்த சம்பாஷணையிலும் சனநாயக நாடுகளுக்குப் பெரும்ஐயுறவையும் உண்டுபண்ணியிருக்கிறது. பிந்திய செய்திப்படி, லாவோஸ்நாட்டில் முன்னேறிச்சென்ற கம்யூனிஸ்தபடைகள் மழையும், பிற கஷ்டநஷ்டங்களும் காரணமாக வந்தவழியே திரும்பிவிட்டனவாம. ஆனால், கோறியயுத்தநிறுத்த சமபாஷணைக்குப் பங்கமேற்படுமென்பதையிட்டு அவைகள் மீளவும் தருவிக்கப்பட்டனவென்று சொல்லப்படினும் இதனை நம்புதற்கிடமேயில்லை.

எது எவ்வாறிருந்தபோதிலும் கம்யூனிஸ்தர்கள் லாவோஸ்நாட்டினை ஆக்கிரமிக்கக் கருத்துக்கொண்டு விட்டார்களென்பது நிச்சயம். அவர்கள் கொண்டுள்ள கருத்துப்படி, லாவோஸ் நாட்டையோ, அன்றேல் கம்போடியாநாட்டையோ அடிப்படுத்துவார்களாயின் அவற்றில் கம்யூனிஸ்த கொடுங்கோல் ஆட்சியே நடைபெறத்தொடங்கி அகன்ற இரும்புத்திரைக்குப் பின்னுள்ள நாடுகளுக்கு ஏற்பட்ட அதோகதிதான் அவற்றிற்கும் ஏற்படுமன்றோ! அப்போது அவற்றின் சுதந்திரம் பறிபோக, அடிமையாட்சியே அந்நாடுகளில் தலையெடுக்கும். ஆராய்வாகக் கவனிக்குமிடத்து, கோறியாவில் ஏற்பட்டுள்ளதிலும் இந்துசீனவில் ஏற்பட்டுள்ள அபாயம் மிகப்மிகப்பெரியதாகும். அடுத்தபடியாகக் கம்யூனிஸ்தர்கள் சீயத்திலும், (தாய்லாந்து) பர்மாவிலும் இலங்கையிலே கால்வைக்க வழியேற்படும். இதனைஉணர்ந்தே தனது அருகாமையிலுள்ள லாவோஸ் நாட்டில் கம்யூனிஸ்தபடைகள் முன்னேறி வருவதையிட்டுத் தனக்கு உடனேதானே இராணுவ தளபாடங்கள் உதவப்படவேணுமென்று சீயஅரசாங்கம் அமெரிக்கவரசைக் கேட்டிருக்கின்றது. பர்மாவிலும், சீயத்திலும் கம்யூனிஸ்தர்கள் படையெடுத்து இருநாடுகளையும் கைப்பற்றிக் கொள்வார்களாயின் இதிலும்அவர்களுக்கு ஓர் சாதகமான காரியமுண்டு. அதாவது அரிசிஉற்பத்தியிலே முக்கியத்துவம்பெற்ற நாடுகள்இரண்டும் அவர்களின் கைப்படும். ஆசியாவின் அரிசி உற்பத்தியைத் தனது ஆதிக்கத்தில் எந்தஅரசு கொண்டுள்ளதோ அதன்கரத்தில்தான் மகாப்பலம்பொருந்திய அரசியல்ஆயுதமும் உள்ளதென்பது இன்றையஉலகில் ஓர் வெளிப்படையான காரியம்.

அரிசியைக்கொண்டு – அரிசி, றப்பர் வியாபாரத்தைக் கொண்டு கம்யூனிஸ்தர்கள் நம்மையும் அடிப்படுத்த முடியும். இலங்கையிலுள்ள கம்யூனிஸ்தர்களும், மற்றும் சமதர்மிகளும் சீனவுடனும், ருஷியாவுடனும் இலங்கை வர்த்தகஉடன்படிக்கை செய்துகொள்ளவேண்டுமென்று தூண்டிவருவதிலிருந்து இது துலாம்பரமாகும். நாம் இன்று கம்யூனிஸ்தசீனவின் அரிசியில்தான் அதிகமாகத் தங்கியிருக்கிறோம். அதனால் உணவுவிஷயமாய் நாம் பிறநாடுகளில் தங்கியிருக்கப் படாதென்பதை நன்குணர்ந்து உணவுப்பொருள்மட்டில் கூடியமட்டும் நம்மில்தானே — நமதுநாட்டில்தானே தங்கியிருக்குமாறு ஆனமட்டும் முயற்சிக்கவேண்டும். நமக்கு அரிசித்தட்டுப்பாடும், பிற உணவுத்தட்டுப்பாடும் ஏற்படுமிடத்து, கம்யூனிஸ்தநாடுகள் எமதுநாட்டின்மீது தங்கள் கம்யூனிஸ்த செல்வாக்கைப் பிரயோகித்து, நம்மை அடிபணியச் செய்யக்கூடிய ஓர் சந்தர்ப்பம் ஏற்படவுங்கூடும். ஆகவே, உணவுச்செய்கையில் நாம் மிக்கானஊக்கமெடுத்து எவர்க்குமே அடிபணியாதிருப்பதற்கான வழிவகையைத் தேடிக்கொள்வதே மதியூகமான செயலென்க.

கர்த். பா. ஆரோகணத்துக்கு

## அடுத்த ஞாயிறு

### சுவிசேஷ வாசிப்பு

(யுவா. 15: 26, 27; 16: 1–4)

அர்ச். யுவானியார் எழுதிவைத்தபடி பரிசுத்தசுவிசேஷத்தின் தொடர்ச்சி:— அந்தக் காலத்திலே யேசுநாதர் தம்முடைய சீஷர்களுக்கு அருளிச்செய்த வசனமாவது: பிதாவிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப் போகிறவரும், பிதாவிடத்தினின்று புறப்படுகிறவருமாகிய சத்திய இஸ்பிரீத்துவான தேற்றரவாளர் வரும்போது என்னைப்பற்றிச் சாட்சி கொடுப்பார். நீங்களும் ஆதிமுதல் என்னோடு கூடஇருக்கிறபடியால் (எனக்குச்) சாட்சி கொடுப்பீர்கள். நீங்கள் இடறற்படாதபடிக்கு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உங்களைச் செபக் கூடங்களுக்குப்புறம்பாக்குவார்கள். அன்றியும் உங்களைக் கொலைசெய்பவன் தான் சருவேசுரனுக்கு (உகந்த) ஊழியஞ்செய்வதாக நினைக்கும்காலம் வருகின்றது. அவர்கள் பிதாவையும் என்னையும் அறியாததினாலே உங்களுக்கு இவைகளைச் செய்வார்கள். ஆகிலும் அந்தக் காலம் வரும்போது, நான் இவைகளை உங்களுக்கு வசனித்தேன் என்று நீங்கள் நினைத்துக்கொள்ளும்படி இவைகளை உங்களுக்குச் சொன்னேன் என்று திருவுளம் பற்றினார்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

## சுதேச வர்த்தமானம்

### பாப்பரசர் குருமடம்

இந்தியாவிலே பூனாநகரில் பாப்பரசர் குருமடத்தைக் கட்டுவதற்கான அத்திவாரக்கல் சென்றபங்குனிமாதம் 25-ந்திகதியன்று இந்தியாவிலே பாப்பரசரின் அப்போஸ்தலிக்க ஸ்தானிகராய் இருந்துவருகின்ற மகாமேன்மைதங்கிய மாட்டீன் எச். லூக்காஸ் ஆண்டவரால் நாட்டப்பட்டுள்ளது. இந்தக் குருமடம் ஐம்பதுஆண்டுக்குமேற்படக் கண்டியிலே அம்பிற்றியா எனுமிடத்தில் இருந்துவரலாயிற்று. மாணவர்களுக்கு அதிகவசதியாயிருக்கும்பொருட்டு இது பூனாநகருக்கு மாற்றப்படவிருக்கிறது. ஏனெனில், இதில்வேதசாஸ்திரம் கற்றுவருகின்ற குருத்துவமாணவர்களில் பெரும்பான்மையினர் இந்தியமேற்றிராசனங்களைச் சேர்ந்தவர்களே.

### ஆஸ்திரேலிய யாத்திரிகர்கள்

மெல்போண்நகரின் துணைமேற்றிராணியாரான மகாவந் ஜே. டி. சிமண்ட் ஆண்டவரது தலைமையிலே இருநூறு கத்தோலிக்க யாத்திரிகர்கள் லூர்துபதிக்கும், ரோமாபுரிக்கும், பதுவைநகருக்கும் செல்லும்வழியிலே சென்ற திங்கட்கிழமை கொழும்புத்துறைமுகங்கண்டு போகின்றார்கள். அதிவண. தோமஸ் சுவாமியவர்களால் ஒழுங்குசெய்யப்பெற்ற இந்தத்திருயாத்திரை பதினெட்டுவாரம் நீடித்திருக்கும். ஆஸ்திரேலிய தேசியயாத்திரை மூன்றுவருடங்களுக்கு ஒருமுறை நடைபெறுகின்றது.

************************

## தேவஸ்துதிகள்

தேவஸ்துதிகளுடன் சேர்க்கப்பட வேண்டிய

### மற்றோர் ஸ்துதி

"அவவுடைய மகிமைப்பிரதாபமுள்ள ஆரோபணம் ஸ்துதிக்கப்படுவதாக"

தேவநற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட்டபிறகு "சர்வேசுரன் ஸ்துதிக்கப் படுவாராக" என்று தொடக்கிச் சொல்லப்பட்டுவரும் தேவஸ்துதிகளிலே "கன்னிகையும், தாயுமான மரியாயின் நாமம் ஸ்துதிக்கப்படுவதாக" என்ற ஸ்துதியைத் தொடர்ந்து இனிமேல்,

"அவவுடைய மகிமைப்பிரதாபமுள்ள ஆரோபணம் ஸ்துதிக்கப்படுவதாக"

எனும் ஸ்துதியும் சேர்த்துச் சொல்லப்பட வேண்டுமென்று பரிசுத்தபிதா பன்னிரண்டாம் பத்திநாத பாப்பரசர் ஆஞ்ஞாபித்திருக்கிறார் என்பதை இத்தாலே தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

✠ ஜே. எமிலியானுஸ்பிள்ளை, O. M. I.
யாழ்ப்பாண மேற்றிராணியார்
13-5-53

************************

### சுகாதாரவாரவிழா

வருகிறஆடிமாதம் 2-ந்திகதி ஆரம்பமாகி நடந்தேறவிருக்கின்ற அகில-இலங்கைச் சுகாதாரவாரத்திலே சுத்தம்செய்யும் இயக்கமும் ஓர் முக்கிய அம்சமாய் இருக்குமெனச் சுகாதார சேவைகளின் தலைவரான டக்றர் டபிள்யு. ஜி. விக்கிரமசிங்க அறிவித்திருக்கின்றார். இந்தஇயக்கம் ஆடிமாதம் 13-ந்திகதியாகிய ஒரேநாளில் நடத்திமுடிக்கக் கூடியதல்ல; ஆகவே, அவ்வாரமுழுவதும் இது தொடர்ந்து நடைபெறவேண்டுமென அவர் கூறுகின்றார். பிள்ளைகளின் சுகாதாரம், உணவு, போஷணை, சயரோகம், மலேரியா ஆதியனபற்றிய பிரசாரங்கள் அவ்வாரத்தில் நடைபெறும். கடைசித்தினமாகிய ஆடிமாதம் 18-ந்திகதியன்று பொதுக்கொண்டாட்டம் நடந்தேறும். பிள்ளைகளின் சுகாதாரஇயக்கத்தில் ஒத்துழைக்குமாறு பாடசாலை அதிகாரிகள் வேண்டப்படுகின்றார்கள்.

### இரணைமடுவும் சிறுபோகமும்

கடும்வரட்சிகாரணமாக இரணைமடு நெற்செய்கைத்திட்டம் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்தத்திட்டத்தின்கீழ் நெற்செய்கைக்குள்ளாகும் 12,000 ஏக்கர் நிலத்திலே இந்தச்சிறுபோகத்தில் 1,200 ஏக்கரில்மாத்திரம் நெற்செய்கை நடத்தப்போதிய தண்ணீரை இரணைமடுக்குளம் கொண்டிருக்கிறது. அதனால் கிடைக்கக்கூடிய தண்ணீரை பங்கீடுசெய்துகொடுக்கத் தீர்மானமாயிருக்கிறது. பிரத்தியேககாணிகளின் சொந்தக்காரர் தங்களுக்குச் சொந்தமாயுள்ள ஒவ்வொருபத்து ஏக்கருக்கும் ஒரு ஏக்கர்வீதம் நீர்ப்பாய்ச்சல்வசதி அளிக்கப்படுவர். இதுவரை அருளப்பட்டுள்ள அதிகம்குறைந்த விகிதம் இதுவாகும். சிறந்தநெல்லை உற்பத்திசெய்துவரும் அரசாங்கமத்துக்கு விசேஷசலுகை காண்பிக்கப்படும். அதனால் இந்தச்சிறுபோகத்தில் அங்கு 50,000 புசல் நெல்லே விளைவிக்கப்படுமென நம்பப்படுகிறது.

### இலவசமதிய போசனம்

பணக்கஷ்டங்காரணமாகப் பாடசாலைப் பிள்ளைகளுக்கு இலவசமத்தியானப்போசனம் உதவுவதையும் கட்டுப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதனால் விசேஷமாய்க் கிராமப்பகுதிப்பிள்ளைகளின் பாடசாலை வரவு வெகுவாகப் பாதிக்கப்படுமென ஆசிரியர்கள் கவலைகொள்ளுகிறார்கள். அரசாங்கம்செய்துள்ள தீர்மானப்படி ஆரம்பபாடசாலைகளிலே ஐந்தாம் வகுப்புவரையில் படிக்கும்பிள்ளைகளே இலவசபோசனத்துக்கு இனிமேல் தகுதியுடையோராவார்கள். இது செயல் இலவசமத்தியானப்போசனம் பெறுஞ சுமார்இரண்டுலட்சம் பிள்ளைகளைப் பாதிக்குமென்று சொல்லப்படுகிறது. அநேககிராமப்பகுதிகளிலே இலவசமத்தியானப்போசனம் ஒரு தொகையானபிள்ளைகள் கிரமமாகப் பாடசாலைக்குவர ஓர் தூண்டுகோலாய் இருக்கிறதென்றும், அதனால் பிள்ளைகளின்வரவில் எவ்வளவோதிருத்தம் ஏற்பட்டிருக்கிறதென்றும், போசனத்தைக் கட்டுப்படுத்துமிடத்து வரவு குறைந்து அதனால் ஒருதொகையான ஆசிரியர்கள் நிறுத்தப்பட்டுப் பிழைப்பின்றிவிடப்படுவரென்றும் ஆசிரியர்கள்கூறி ஆட்சேபிக்கின்றார்கள். கல்வி அதிகாரிகளோ அரசாங்கத்தின் பணக்கஷ்டத்தையிட்டு அத்தீர்மானத்தை நிறுத்திப்பிடிக்கின்றார்கள்.

### சேர் அருணசலம் நூற்றாண்டுவிழா

இலங்கையின் மாபெருஞ்சனத்தலைவர்களில் ஒருவராய் விளங்கியிருந்து காலஞ்சென்ற சேர் பொன்னம்பலம் அருணசலம் அவர்களின் நூறாவது வருடப் பிறந்தவிழா வருகிறபுரட்டாசி மாதம் 14-ந்திகதிவருகின்றது. அதனைச்சிறப்பாகக் கொண்டாடுதற்கான ஏற்பாடுகளைச் செய்வதுபற்றிக் கலந்து ஆலோசிக்குமாறு சென்றவெள்ளிக்கிழமை றோயல்கல்லூரி மண்டபத்திலே போக்குவரத்து மந்திரியாரும், பிரதிநிதிகள்சபையின் முதல்வருமான சேர் ஜோண் கொத்தலாவல அவர்கள் தலைமையில் ஓர் கூட்டம் நடந்தேறியது. அதிலே அவர் பேசியபோது: இன்று நாம் சுகிக்கும் சுதந்திரமானது சேர் பொன்னம்பலம் அருணசலம் போலும் பெரியார்களின் பிரயத்தனங்களாலேயே பெரும்பாலும் கிட்டலாயிற்று; பழம்பெருந் தேசாபிமானிகள் ஞாபகப்படுத்தப் படவேண்டுமென்று இளஞ்சந்ததிக்குச்சொல்வது தகுதியாகும்; சேர் அருணசலம் இலங்கையின் முதலாவது சிவிலுத்தியோகஸ்தர்; சிவிலுத்தியோக சேவையிலே பணியாற்றியபின்னர் அவர் பொதுசன வாழ்க்கையிலிருந்து இளைப்பாறுவதற்குப்பதில் அரசியலில் பிரவேசித்து இலங்கைத் தேசியகாங்கிரஸின் முதற்தலைவரானார் எனக்கூறி, பிரதமரிடமிருந்து கிடைத்தகடிதத்தைப் படித்துக்காட்டினார். அபிமானிகள் பலரிடமிருந்துகிடைத்த நூற்றுக்குமேற் பட்டகடிதங்களும் படித்துக்காட்டப்பட்டன. அதன்மேல் இவ்விழாவைக் கொண்டாடுதற்கான ஒழுங்குகளைச் செய்யும்படி ஓர் நிர்வாகசபை ஆக்கப்படலாயிற்று.

### புதியஅரசிறைவருடச் செலவு

வருகிறஐப்பசி 1-ந்திகதி ஆரம்பமாகவிருக்கும் இலங்கைப் புதியஅரசிறை வருடத்திலே அரசாங்கம் செலவு செய்ய மதிப்பிட்டிருக்கும் பணம் 84 கோடி ரூபா வரையிலாகும். இச்செலவுதொகை திட்டக்கம்மிற்றியால் ஆராய்ந்து மேலும்குறைக்கப் பட்டபின்னரே வருகிறஆனிமாதம் 21-ந்திகதி மந்திரிசபைமுன் சமர்ப்பிக்கப்படும். அதனை மந்திரிசபை ஒரு வாரமளவாக ஆராய்ந்ததன்மேல் ஆடி மாதம் 21-ந்திகதியன்று பிரதிநிதிசபையிலே சமர்ப்பிக்கவிருக்கிறது.

### சாய்ப்புச்சட்ட மறுதிருத்தம்

தொழில்—சமூகசேவா மந்திரியார் சாய்ப்புச்சட்டத்தில் மீளவுஞ்செய்துள்ள திருத்தப்படி, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், கண்டி, குருநாகல் எனும் நகர்களின் முனிசிப்பல்எல்லைக்குள் வாரந்தோறும் இருநாட்களிலே மேலதிகமாக ஒருமணித்தியாலம்—அதாவது காலை 9 மணிமுதல் மாலை 7 மணிவரையில் சாய்ப்புகளைத்திறந்து வைக்க அனுமதியளிக்கப் பட்டிருக்கிறது.



சதாசகாய மாதாவின் கோணம்

## மாதாவின் வல்லபம்

இலங்கையின் சிரேஷ்ட நீதியரசராகவிருந்து காலஞ்சென்ற சேர் பிரான்சீஸ் சூட்ஸ் அவர்களின் பாரியார் பொறளையில் மாதாந்தம் வெளிவரும் "நோவனைப் புதினம்" என்னும் பத்திரிகைக்கு எழுதியனுப்பிய கடிதத்தின் சாரம்வருமாறு:

சதாசகாய மாதாவின் வல்லபத்தையும், அவவுடைய உருக்கமான நேசத்தையும் எடுத்துக்காட்டும் இச்செய்தியை—எனது மனப்பூர்வமான நன்றியைப் பகிரங்கமாக அறிக்கையிடுவதற்கும், மாதாவின் பக்தகோடிகள் அவவில் இன்னும் மேலான நம்பிக்கை வைக்கஏதுவாவதற்கும், நம் சமயத்திற்சேராத பிறமதநண்பர்கள் தேவதாயார்மூலம் தேவனைக்கண்டடைய ஒருகால் வழியாவதற்குமாக ஈண்டு வரைகின்றேன்.

எனதுமகள் இவோன் என்பவ இந்தியாவிலே ஐம்முநகரிலே குடிபதியாக இருக்கிறா. சிலவாரங்களின்முன் ஒரு நாட்பின்னேரம், அவவுக்கு வருத்தங் கடுமைஎன்றும், நான் அவ்விடம் உடனேவர வேண்டுமென்றும் ஒரு அவசரதந்தி கிடைத்தது. ஐம்முநகருக்கு நான்முன்பு போனதுகிடையாது. எனக்குமோ போதியளவு சுகமில்லை. இந்தப்பயணத்தைச் செய்ய என்தேகசுகமோ, மனத்தைரியமோ என்னை அவ்வளவு தூண்டவில்லை.

என்பிள்ளையின் நிலைமையைப்பற்றிய அங்கலாய்ப்பு ஒருபக்கமும், எனது சுகநிலையைப்பற்றிய கவலைமறுபக்கமும், என்னசெய்வதெனத் தெரியாது தத்தளிக்கும்மனநிலை இன்னோர்பக்கமுமாக என்னைவாட்டின. இந்தஇடர்களிலிருந்து என்னைநீக்கி எனக்கு ஒத்தாசைபுரியும்படி சதாசகாயமாதா படத்துக்குமுன் முழந்தாளிலிருந்து மன்றாடினேன். "ஓ! சதாசகாயமாதாவே, நான் நாளைக்குச் சகலஅர்ச்சியசிஷ்டர்கள் ஆலயத்தில் உமதுபோரால் நடைபெறும் நோவனையிற்பங்குபற்ற எனதுகாரில் ஏறுவதற்குமுன் 'நீர் வரவேண்டியதில்லை. இவோனின் நிலைமை நயந்திருக்கிறது' என்ற கருத்துப்பட ஓர்தந்தி கிடைக்கச்செய்தருளும்" என்பதே எனதுசெபத்தின்சாரமாகும்.

கேட்க உங்களுக்கு நூதனமாகத் தோன்றலாம். ஆனால், இது உண்மையில்உண்மை. அடுத்தநாட்சாயந்தரம் (புதன்கிழமை) நோவனைக்குப்போகக் காரில்ஏறஆயத்தம். ஒரு தந்திச்சேவகன் துரிதமாக என்கார் அண்டைவந்து தந்திஒன்றைத் தந்தான். தந்தியைத் திறந்துவாசித்தேன். என்கண்களையே நான் நம்பமுடியவில்லை. முதல் நாள் பின்னேரம் சதாசகாயமாதாவை நோக்கிமன்றாடிய அதேசெபத்தின்சாரமமைய, நான்கேட்டுக்கொண்டபடி தந்தியில் எழுதப்பட்டிருந்தது. "நீர் வரவேண்டியதில்லை. இவோனின் நிலைமை நயந்திருக்கிறது." நான் அடைந்தசந்தோஷத்தையும், என்னிருதயத்தில் எழுந்த நன்றித்துதியையும் பற்றி நான் சொல்லவேண்டியதில்லை. சதாசகாயமாதா எப்போதும் ஸ்துதிக்கப்படுவாவாக!

## செம்பியன்பற்று

# அர்ச். பிலிப்புநேரியார் திருநாள்

இத்திருநாள் வழமைப்பிரகாரம் இம்மாசம் 17-ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவதின உற்சவங்களுடனும், 26-ந் திகதி பிற்பகல் அன்னதானத்துடனும் முடிவுபெறும்.

### திருநாள் வைபவ விபரம்

(1) 25-ந் திகதி வேஸ்பர்
26-ந் திகதி காலை 6-00 மணிக்குப் பெரியபாடற்பூசை.
26-ந் திகதி காலை 7-30 மணிக்குச் சுற்றுப்பிரகாரம்.
26-ந் திகதி மாலை 7-00 மணிக்கு அன்னதானம்.
(2) பாவசங்கீர்த்தனம் கேட்பதற்குக் குருமார் சமுகமாயிருப்பார்கள்.

செம்பியன்பற்று
5-5-53

கட்டளைக்குரவர்

## பாடசாலைக்கோணம்

சிலாபம்
30-4-53

வண. ஞானத்தந்தை சமுகத்திற்கு ஞானப்பிள்ளையாகியயான் ஆசீர்வாதம் கேட்டு எழுதுவது. பின்வரும்வினாவிற்குத் தயவுசெய்து விடைதந்து உதவுங்கள். என்மனசில் பாரியகலக்கங்கள் உண்டுபடுகின்றன.

வினா: "உலக குடிசனம் அளவுக்குமிஞ்சி அதிகரித்துக் கொண்டு வருகின்றதே. இதைத் தடைபண்ணாவிட்டால் இவ்வளவு தொகையினருக்கும் எங்ஙனம் தக்கஉணவு காணமுடியும்? தாய்தகப்பன்மார்தங்களது ஏராளமான பிள்ளைகளை எங்ஙனம் தாபரிப்பார்கள்?"

அமைச்சலுள்ள ஞானமகன்
S. M. V.

விடை: இதே முறைப்பாட்டை முன்னர் பலமுறைகளிலும் கேட்டிருக்கிறோம். 1798-ம்ஆண்டு T. R. Malthus என்னும் ஒருபாதிரியாரும் இதேவினாவிற்கு ஒருவிடைகூறினார். அவரின் கொள்கைப்படி, குடிசனம் வருஷாவருஷம் அதிகரித்துக்கொண்டு வருவது மாத்திரமல்ல, ஒவ்வொரு 25-ம் வருஷத்திலும் இருமடங்காகியும் விடுகிறதாம். உணவுப்பெருக்கமோ அப்படியல்லவாம். ஆகையினால் சனங்கள் மிகப்பிந்தியவயசில் விவாகம்முடிப்பதும், முடித்தபின்னும் கூடியளவு விரத்தத்துவம் காத்துப் பிள்ளைகளின் பிறப்புத்தொகையை மட்டுப்படுத்துவதும் நலமாம்என்று அவர்போதித்தார். அவரின்கொள்கையினர் இத்துடன் நின்றுவிடாமல், கர்ப்பத்தடை பண்ணுவதும், சிசுக்கொலை புரிவதும் தகாதகாரியங்களல்ல என்றும் நின்றனர்.

ஆனால், சத்திய திருச்சபையின் போதகம் இதுவிஷயத்தில் என்னவாகும்? — திருச்சபைப் போதகத்தின்படி முறையற்ற கர்ப்பத்தடையாவது, சிசுக்கொலையாவது சுபாவ முறைக்கு எதிரான, பாரதூரமான குற்றங்கள். அப்படிச்செய்கிறவர்கள் தேவ கோபத்துக் குள்ளாகிறார்கள். குடிசனவிர்த்தியை மனுஷன் மட்டுப்படுத்த வேண்டிய அவசியமில்லை. படைத்தோனுக்குப் பாதுகாக்கும் விதமும் தெரியும். அதுவுமன்றிக் குடிசன மதிப்பு ஆராய்ச்சியின்படி சனவிர்த்தி எப்போதும் ஒரேநிலையில் நிற்பதில்லை. பலமுறைகளில் அதிகமாய்த் தாழ்வதுமுண்டு. உணவுவிர்த்தி சனவிர்த்தியிலும்பார்க்கப் பன்மடங்கு கூடியது. அதுவுமன்றி, மனுஷமுயற்சியால் அது பெருப்பிக்கப்படவும் கூடியது. ஆகையால், அநேகம் பிள்ளைகளைத் தாபரிக்க இயலாது என்று சொல்லிக்கொண்டு முறையீனமானவிதமாய்ப் புத்திரபாக்கியத்தைத் தடுப்பவர்கள் துரோகம் கட்டிக் கொள்ளுகிறார்களென அறிக.

N. B. வினாக்கள் அனுப்புவோர் தங்கள் முழுப்பேரும் எழுதியனுப்ப வேண்டும். முழுப்பேரையும் பிரசுரிக்க மாட்டோமென்றாலும், அது அவர்களது நேர்மைத்தனத்தையிட்டுஎமக்குச் சாட்சியாயிருக்கும்.

விலாசம்:

Question Box:
St. Joseph's Catholic Press,
JAFFNA.

### ஞாயிறுவார றெயின்கள்

இம்மாதம் 18-ந்திகதியிலிருந்து, அன்றேல் இம்மாதம் முடிவதற்குள் ஞாயிற்றுக்கிழமையிலே குறைந்த தொகையானறெயின்வண்டிகளேஓடவிடப்படும். அவ்வாறுசெய்து வருடம் ஒன்றுக்கு ஐந்துலட்சம் ரூபா மிச்சம் பிடிக்க றெயில்வேப்பகுதி எண்ணுகின்றது. தற்போது ஞாயிற்றுக்கிழமை ஓடவிடப்படும் றெயின்கள் 10,000 மைல்தூரம் பிரயாணஞ்செய்கின்றன. இந்தத்தூரத்தை 1,500 மைலாலே குறைப்பதற்குத் தீர்மானமாயிருக்கிறது. எல்லாப்பாதைகளிலும் றெயில்—கார்களும், சொற்பதூரம் ஓடுகின்ற றெயின்களும்உட்பட ஞாயிற்றுக்கிழமை ஓடும் றெயின்களின் தொகை ஏறக்குறைய ஐம்பதாலே குறைக்கப்படும்.

## AUCTIONEER'S & BROKER'S LICENCE

The following persons have been issued licenses to practise as Auctioneer's and Broker's for the year 1953.

### Auctioneer's Licence

1. Mr. S. Ambalavanar, Pungudutivu.
2. „ E. R. Joseph, "Carmel," Chundikuli.
3. „ P. Rajaratnam, Anaikoddai.
4. „ P. Muthuthamby, Suthumalai South.
5. „ S. Sangarapillai, Tellipallai.
6. „ V. Erampamoorthy, Karainagar East.
7. „ N. Arumugam, Sithankerney.
8. „ P. Appiah, Kokuvil East.
9. „ S. Pasupathy Chettiar, Vannarponnai.

### Auctioneer's & Broker's Licence

1. Mr. S. Ratnasabapathy, 35 A—Colombogam Road, Jaffna.
2. „ K. Sittambalam, 77 Manipay Road, Jaffna.
3. „ V. A. Duraiappah, "Malar Vasam," Chundikuli.
4. „ A. S. Kandiah, Karainagar.
5. „ C. Arasaratnam, 51/3 Eachchamoddai.

K. Shanmugam,
Municipal Commissioner.

# பாலர் பக்கம்

## அண்ணா சொல்வது

அருமைச் சகோதரங்களே!

எக்காரியத்திலும் பிறர் உதவியை வேண்டி நிற்பவர்கள் கஷ்டம் வரும் வேளைகளில் ஒன்றும் செய்யத் தெரியாமல் திகைப்பார்கள். ஒரு சங்கடம் நேரும் பொழுது கொழுகொம்பைத் தேடுவார்கள். தாவிக்கொள்ள ஒன்றும் இல்லாவிடில் "தொப்" என்று கீழே விழுந்து விடுவார்கள்.

கீழே விழுந்ததும் தரையில் விழுந்த மீன்போல் தத்தளிப்பார்கள். ஆயுதம் இழந்த வாள்வீரர் போல் விழிப்பார்கள். உதவியின்றி நிலைபரத்தைச் சமாளிக்க முடியாது போவார்கள்.

தன் முயற்சியினால் சித்தி பெறுவது தன் நம்பிக்கையை வளர்க்கும். தன் நம்பிக்கை கொண்டவன் என்று உலகம் அறிந்து விட்டால் உடனேயே உலகம் அவனில் நம்பிக்கை வைக்கும். சுபம்!

உங்கள் அன்புள்ள

அண்ணா

## பட்டம் பார்

— I —

பட்டம்ஏறுது பட்டம்ஏறுது
பட்டம் ஏறுது பார்த்தாயா?
வெட்டவான வெளியின்மீது
பட்டம் ஏறுது பார்த்தாயா?

— II —

வட்டமிட்டுப் பருந்துபோலப்
பட்டம் ஏறுது பார்த்தாயா?
கெட்டிக்காரன் கல்விபோலப்
பட்டம் ஏறுது பார்த்தாயா?

— III —

குட்டிக்கரணம் போட்டுப்போட்டுப்
பட்டம் ஏறுது பார்த்தாயா?
துட்டனுடைய கோபம்போலப்
பட்டம் ஏறுது பார்த்தாயா?

— IV —

செட்டியாரின் வட்டிபோலப்
பட்டம் ஏறுது பார்த்தாயா?
மட்டில்லாத முயற்சியாலே
பட்டம் ஏறுதல் பார்த்தாயா?

"ஜெயம்"

## எம்மைக் கேட்பது என்ன?

மகன் :— அம்மா! அன்பொடு கூறுயே!
அந்தப் பாத்திமா கிரிஎங்கே?
இம்மா நிலமே யேசன்னை
எம்மைக் கேட்பது ஏதம்மா?

தாய் :— கண்ணே! பாத்திமா கிரிஅந்தக்
கவினார் பண்டத் தரிப்பில்தான்
பொன்னாட் டரசி கேட்பதென்ன?
பொலியும் செபமும் தபமுந்தான்

மகனே! உந்தன் தபஇதயம்
மகிதலத் தரசி கேட்பதுவே
செகமே பாவிகள் மனந்திரும்ப
செபமே தினமும் கேட்பதுவே

தினமும் சொல்லிவா செபமாலை
செபதப அரசி கேட்பதிது
மனமாய்ச் செய்துவா ஒறுத்தல்பல
மாதா எம்மைக் கேட்பதிது

—ஓர் மாணவி

## சாடிக்கேற்ற மூடி

அழகன் படு முட்டாள். முனியன் முழு முட்டாள். இருவரும் உயிருக்குயிரான நண்பர்கள். இந்த இரு முட்டாள்களும் ஒன்றுசேர்ந்து விட்டால் அப்புறம் அவர்கள் செய்யும் முட்டாள்தனமான காரியங்களைப்பற்றிப் பேசுவானேன். ஊரெல்லாம் அவர்களைச் சாடிக்கேற்ற மூடிஎன்று கூறிக் கேலிசெய்யும்.

ஒருநாள் அழகனும், முனியனும் சினிமா பார்க்கப் போவதென முடிவு கட்டினார்கள். அவர்கள் வசித்த ஊரில் சினிமாத் தியேற்றர் கிடையாது. மூன்றுமைல் தூரத்தில் உள்ள பட்டினத்துக்குத்தான் செல்ல வேண்டும். இருவரும் அப்பட்டினத்தை நோக்கி நடந்துசென்று படக் காட்சிபார்த்தார்கள்.

காட்சிமுடிந்ததும் இருவரும் தங்கள்ஊருக்குத் திரும்பினர். அன்று அமாவாசையானதால் ஊருக்கு வரும்போது நன்றாக இருட்டிவிட்டது. இன்னும் பாதித்தூரம் இருக்கிறதே; இந்த இருட்டில் எப்படி நடந்து போவதென்ற பயம்ஏற்பட்டது. ஆயினும், இருவரும் ஓரளவு தைரியத்தை வருவித்துப் பேசிக்கொண்டு வழிநடந்தனர். கடைசியாக, ஊரின் எல்லையை அடைந்தபோது இருவருக்கும் ஒரு பெரிய பிரச்சனை உண்டாயிற்று. முனியனின் வீடு கிழக்கே இருக்கிறது. அழகனின் வீடு மேற்கே இருக்கிறது. ஆகவே, இருவரும் தனித்தனி பிரிந்து செல்ல வேண்டுமே என்று கவலைப் பட்டார்கள். பின்பு அவர்கள் ஒரு முடிபுக்கு வந்தார்கள். எப்படியெனில், அழகனுக்குத் துணையாக அவன் வீடு வரைக்கும் முனியன் செல்வதெனவும், பின்பு முனியனுக்குத் துணையாக அவன் வீடு வரைக்கும் அழகன்செல்வது எனவும் முடிபுசெய்தார்கள். முதலில் அழகனுக்குத் துணையாக முனியன் அவன் வீடுவரைக்கும் சென்றான். பிறகு முனியனுக்குத் துணையாக இவன் வீடு வரைக்கும் அழகன் சென்றான். மறுபடி முழுமுட்டாளான முனியன் அழகனுக்குத் துணையாக அவன் வீடு வரையும் சென்றான். இப்படியே இரவு முழுவதும் இருவரும் போவதும், வருவதுமாக இருந்தார்கள்.

கடைசியாகக் கொக்கரக்கோ என்ற சத்தம் கேட்டதும் அவர்கள் இருவரும் நின்றார்கள். சுற்று முற்றும் பார்த்தார்கள். பொழுது விடிவதைக் கவனித்தார்கள். உடனே படுமுட்டாளான அழகன், முனியா இனிப் போதும், பொழுது விடிந்து விட்டது; இனி நாங்கள் தனித்தனி வீடுசெல்லலாம்,பயமில்லை என்று கூறினான். இருவரும் ஒருவாறு வீடுபோய்ச் சேர்ந்தார்கள்.

மன்னார், சே. புஷ்பம்.

## உத்தம தாய்

வாலிப சக்கரவர்த்தியான நெப்போலியனை மனங்குளிரப் பண்ணி அவனுடைய பரிவைப் பெறும்பொருட்டு உயர்குல மாது ஒருத்தி பலவிதமாக அவனைப் புகழ்ந்தாள். எல்லாப் புகழையும் ஒருங்கு கூட்டுவது போல ஒரே வார்த்தையில் "சக்கரவர்த்தி பொனப்பாட்டிலும் பார்க்க யார் மேலாக இருக்கக்கூடும்?" என்றாள்.

நெப்போலியன் அவளைப் பார்த்து: "அம்மா, ஒருவர், ஓர்உத்தமதாயாய் இருக்கலாம்" என்றார்.

## சிறுவரும் செபமாலையும்

பாத்திமா மாதாவின் வேண்டுகோளைச் சிறுவர் எப்படி அனுசரிக்கிறார்கள் என்று அறிவது, பெரியோர் மனதைப் பலப்படுத்த உதவும். கலிபோணியாவின் பாடசாலையொன்றில் நாள்தோறும் ஒரு செபமாலைச் சுற்றுப்பிரகாரம்நடக்கும். பச்சைப் பசேலென்று விளங்கும் ஓர்முற்றம் நடுவே இருக்க, அதைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் வகுப்பு அறைகள் உண்டு. முற்றத்தின் நடுவில் பாத்திமா மாதாவின் சலவைக் கல் சுரூபம் ஒன்று இருக்கிறது. தங்கள்மனதிலுள்ள கவலைகளையும், தங்கள் இன்ப துன்பங்களையும் சிறுவர் மாதாவுக்குச் சொல்லுவார்கள். ஓய்வுவேளைகளில் பிள்ளைகளை மாதா சுரூபத்துக்கு முன் காணலாம்.

இப்பாடசாலைக்கு அருகில் ஆபத்தை உண்டாக்கக் கூடிய மருந்துகள், உப்புகள் செய்யப்படும் ஆலைகள் உண்டு. தாங்கள் ஆபத்துகள் மத்தியில் இருக்கிறார்கள் என்று பிள்ளைகள் நன்கு அறிவார்கள். ஒவ்வொரு பின்னேரமும் பிள்ளைகள் சாலையைச் சுற்றிச் செபமாலை ஓதிப் பாத்திமா மாதா பேரில் ஓர் பண்பாடி முடிப்பார்கள். தங்களுக்கு உதவி எங்கே தேடலாம் என்று இப்பிள்ளைகள் நன்குஅறிவார்கள்.

## செபமாலையின் பலன்

பதின்மூன்றாம் சிங்கராயர் பாப்பானவராக அர்ச். இராயப்பரது சிம்மாசனம் ஏறுகையில் ஏற்கனவே அவர் வயோதிபர். கத்தோலிக்க திருச்சபைக்கு அது துக்ககரமான காலம். எப்பக்கத்திலும் அவருக்குக் கொடிய சத்துருக்கள். திருச்சபை பல இடங்களிலும் குரூரமாகத் தாக்கப்பட்டு வந்தது. பாப்பானவரோ வத்திக்கானில் மறியற்காரன்போல் இருந்தார். சிங்கராயரோ தமது நம்பிக்கையை எல்லாம் பரலோக அன்னை அளித்த செபமாலையில் வைத்தார். கிறீஸ்தவர்களை அடிக்கடி செபமாலை செபிக்கத் தூண்டிப் பல நிருபங்கள் எழுதினார். ஐப்பசி மாதத்தைச் செபமாலை இராக்கினியின் மாதமாக விசேஷ பத்திச்சிறப்புடன் கொண்டாட வேண்டுமென ஆஞ்ஞாபித்தார். சொற்பகாலத்தில் அதிசயத்துக்குரிய மாற்றம் ஏற்பட்டது. வல்லமையுள்ள கொடிய சத்துருக்கள் திருச்சபையை உபத்திரவப் படுத்துவதை விட்டொழித்துப் பாப்பானவரை வந்தித்து வழிபட ஆரம்பித்தனர். ஜேர்மனியில் திருச்சபையைக் குரூரமாய் உபாதித்து வந்த பிஸ்மார்க் ரோமையோடு சமாதானம் செய்தான். ஜேர்மனிக்கும், ஸ்பெயினுக்கும் இடையே ஏற்பட்டிருந்த பிணக்குகளைத் தீர்க்கப் பாப்பானவரை அழைத்தான். ஏழாவது எட்வாட்அரசரும், ஜேர்மனியின் சக்கரவர்த்தியும் போட்டி போட்டுக் கொண்டு பாப்பானவருக்கு வந்தனை செய்தார்கள். கடைசியாகச் சிங்கராய பாப்பானவர் மரணப் படுக்கையில் இருந்தார். "பரிசுத்த பிதாவே, செபமாலைக்காக நீங்கள் செய்திருப்பதை நினைத்துப்பாருங்கள், உங்கள் ஆத்துமத்தை மோட்சத்துக்கு எடுத்துச் செல்லும்படி கடவுளுடைய தாயார் காத்து நிற்கிறார்" எனக் கருதினால்மார் அவரிடம் சொல்லி அவரைத் தேற்றினார்கள்.

## சயரோகப் புதியமருந்து

சயரோகத்தைத் தடைப்படுத்துவதிலே அதிகசத்துள்ளமருந்துகளான ஸ்றெப்ரோமிஸின், ஐசோனியாஸிட் என்பனஇரண்டும் தற்போது ரசாயன முறையாக ஓர்தனிமருந்தாய்க் கலக்கப்பட்டுள்ளது. "ஸ்றெப்ரோயிட்ருஸிட்" என அறியப்படுகின்ற இப்புதியமருந்து கொண்டு நடத்தியபரிசோதனைகளிலிருந்து சயரோகநிபுணர்களுக்குக் கிடைக்கக்கூடிய அதிகம்சக்திவாய்ந்த ஓர்ஆயுதமாக இதுகருதப்படுகின்றது. ஏனெனில், முந்திய இருவிதமருந்துகளுக்கும் கட்டுப்படாதிருந்த சயரோகக்கிருமிகளை இப்புதியமருந்து கட்டுப்படுத்தவல்ல சக்தியைக் கொண்டிருப்பதே. டக்றர்மாருக்குத் தற்போது கிடைக்கக்கூடிய அதிகஞ்சிறந்த சயரோகத்தடைமருந்து இதுவாயிருக்குமென்று சமீபகாலத்தில்வெளியான அறிக்கைகள் விளக்குகின்றன.

* * *

— பால்க்கன் நாடுகளிலே சோவியற் பட்டியைவிட்டு முதன்முதலாக வெளியேறியது யூகோசிலேவியாவாகும். அடுத்தபால்க்கன்நாடாகச் சோவியற் பட்டியிலிருந்து அல்பேனியா வெளியேறுமென வாஷிங்ரன்நகரில்இருந்து வருகின்ற கிரேக்கஸ்தானிகரான திரு. அத்தனுஸே பொலிற்றிஸ் அவர்கள் கூறுகின்றார்.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பரிசுத்த பாத்திமாநாயகியின் மன்றாட்டால் வியாதி துன்பம் நீங்கினபடியால் நான்செய்த நேர்த்தியின்படி இதைப்பிரசுரிக்கிறேன்.

கிறீஸ்தினா பர்னாந்துபிள்ளை
மணற்சேனை

## மார்த்தாளும் மரியாவும் உபசரித்ததுபோல்

தேவநற்கருணை வாங்கவேண்டும் என்பது திவ்வியயேசு கொடுத்தகட்டளை. "என்மாமிசத்தைப் புசித்து என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவன் என்னில் வசிக்கிறான்; நானும் அவனில் வசிக்கிறேன்; நீங்கள் என்மாமிசத்தைப் புசியாமலும் இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுடன் என்சீவன் இராது."

திவ்வியநற்கருணை வருடத்திற்கு ஒருமுறையாகிலும் வாங்கவேண்டுமென்பது திருச்சபையின் கட்டளை. திவ்வியநன்மைவாங்குவதற்கு முந்திய இரவுமுதல் மறுநாள் காலைவரை நீ ஆண்டவரை உன் இருதய பீடத்தில் வரவேற்கப்போகிறாய் என்பதை நினைத்துக்கொள். நடுச்சாமம் தொடங்கி வாயில்ஒன்றும்போடாதே, குடிக்காதே, சாப்பிடாதே.

காலையில்எழுந்தவுடன் மற்ற எண்ணங்களையெல்லாம் அகற்றிப்போட்டு, ஆண்டவர் உன்னிடம் வரப்போவதை நினைத்துக்கொள். பல்விளக்கி, வாய் அலம்பி, சுத்தமானஆடை அணிந்துகொள். பல்விளக்கும்போது இரண்டொருதுளிதண்ணீர் அகஸ்மாத்தாய் வாய்க்குள்போய்விட்டால் அதைப்பற்றிக் கவலைப்படாதே. பல்விளக்கின அடுப்புக்கரி நாக்குநிறையப் படர்ந்திருப்பதோடு, அல்லது வெற்றிலைபோட்டநாவில் சிவப்புப்படலம் உறைந்திருப்பதோடு திவ்வியநன்மைவாங்கப் போகாதே.

குருவானவர் பூசையில் பரமண்டலமந்திரம்சொன்ன நேரத்திலிருந்தாவது திவ்வியநன்மைவாங்கத் தகுந்தஆயத்தம்செய். பூசைக்குஉதவிசெய்கிறவன் பாவசங்கீர்த்தனமந்திரம் சொல்லிமுடிந்ததும், கிராதியண்டைபோய் முழங்காலில்இரு. கிராதியண்டை இருக்கும்பொழுது, கைகூப்பி அடக்கமாய்இரு. கைகளைக் கிராதியின்மேல் பரப்பிப் பிறருக்கு இடைஞ்சலாயிராதே. அங்கும் இங்கும் வேடிக்கை பார்த்துக்கொண்டும் இராதே, குருவானவர் திவ்வியநன்மை கையில்ஏந்திக் காத்துக்கொண்டிருக்க நீ தூங்கிவிழுந்து அல்லது தனிப்பக்தி முயற்சிகளைச் செய்துகொண்டு காலதாமதம் செய்யாதே. கிராதியில் இடம்இருக்கும்போது நீ போகாமல் குருவானவர் பீடத்திற்குப்போகையில் ஓடிப்போய்ச் சைக்கினைசெய்வது அழகல்ல. குருவானவர் உனக்குத் திவ்வியநன்மை கொடுக்கப்போகிறசமயம் தலையைஉயர்த்தி, கண்களைமூடி, நாக்கைநீட்டு. குருவானவரைக் கூர்ந்து பார்க்காதே. இதற்குமாறாய்த் தலையை குனிந்துகொண்டு நாக்கைநீட்டாமல் வாயை திறப்பது சரியல்ல.

திவ்வியநன்மை வாங்கியபின் சிறிதும் தாமதமின்றிக் கிராதியைவிட்டு எழுந்து உன் இடத்திற்குப்போ. மற்றவர்கள் வருவார்கள்என்பதை மறந்து தியானம் பண்ணிக்கொண்டிராதே. தியானத்திற்குஇடம் கிராதியல்ல. உன் இடத்திற்குப் போனபின் உன்னில் எழுந்தருளிவந்திருக்கும் சற்பிரசாதநாதருக்கு ஆராதனைசெய். கால்மணி நேரமாகிலும் இத்தகைய பக்திமுயற்சிகளில் செலவழி. கிராதியிலிருந்து உன் இடத்திற்குப்போனதும் உட்கார்ந்துகொள்வது சுத்தமௌட்டீகம். பிறரோடுபேசுவதும் பெரும்அநுச்சாரம். ஏனெனில் திவ்வியநற்கருணைவழியாய் உன்ஆண்டவரை உன்ஆத்தும அரண்மனைக்குள் அழைத்திருக்கிறாய். அது சாதமல்ல, பிரசாதமல்ல, தேங்காய் பொரிகடலைஅல்ல.

மார்த்தாளும், மரியம்மாளும் தங்கள்வீட்டிற்கு விஜயம்செய்த ஆண்டவரை உபசரித்ததுபோல் நீயும் உன் இருதயத்தில் எழுந்தருளிவந்திருக்கும் ஆண்டவரை உபசரிக்க வேண்டாமா? நீ திவ்வியநற்கருணை வாங்காவிட்டால் அருகிலே குருவானவர் நற்கருணை கொடுக்கும்போது சம்மணம்போட்டிராதே. முழங்காலில்இரு. உன்அருகில் சிறுவர்கள் பேசிச்சிரித்துக்கொண்டிருந்தால் அன்பாய் அவர்களையும் முழங்காலில் இருக்கும்படிசொல். நற்கருணை உட்கொண்டநாள் உன்பாக்கியமானநாளாக இருக்கட்டும்.

— முன்னோடி

## பொதுவர்த்தமானம்

### பயங்கர விமானவிபத்து

அதிவேகமாகப் பறந்துசெல்லும் ஜெட்விமான பிரயாணசரித்திரத்தில் இம்மாதம் 2-ந் திகதி சனிக்கிழமை பெரிதும்கவலைக்குரிய ஓர்தினமாகும். அன்று பி-ஓ-ஏ-சி ஜெட்விமானம் ஒன்று பிரித்தானியர்கள் 35 பேர் உட்பட 43பேருடன் பறந்துசென்றபோது கல்கத்தாவுக்குச்சமீபமாகப் பயங்கர விபத்துக்குள்ளாகவே, அத்தனைபேரும் உயிரிழந்தார்கள். இந்தவிமானம் சிங்கப்பூர்வழியாக லண்டனை நோக்கிப் பறந்துகொண்டிருந்தபோதே விபத்து ஏற்படலாயிற்று. அதற்குக்காரணம் அப்போதுவீசிய கடுமையான புயற்காற்றேயாம். இறந்தபிரித்தானியர்களில் பலபிரபலஸ்தர்களும், அவர்களின்மனைவியர்களும் அடங்கியுள்ளார்கள். இறந்தவர்களின்பிரேதங்களில் அநேகம் இன்னாருடையதெனத் தானும் கண்டறியமுடியாமற் போய்விட்டது. தனதுபிரயாணத்தைஆரம்பித்து, இதுவரை ஓர்உயிருக்குமே சேதமில்லாது 27,000 பிரயாணிகளை ஏற்றியிறக்கியுள்ள விமானம் ஒன்று முதலாவதுவருடமுடிவில் விபத்துக்குள்ளானமை விசனத்துக்குரியதே.

### சமாதான விருப்பின்பலன்

சென்ற கார்த்திகைமாதம் நடைபெற்ற ஜனாதிபதித்தேர்தலில் ஜெனறல் ஐஸன்ஹாவருடன் போட்டியிட்டவரும், தற்போது ஆசியநாடுகளில் பாக்கச்சுற்றுப்பிரயாணஞ் செய்துவருகிறவருமான திரு. எட்லி ஸ்ரீவன்சன் அவர்கள் புதியடில்லிநகரில் பேசியது வருமாறு: "இந்துசீன நாடுகளில் ஒன்றாகிய லாவோஸைக் கம்யூனிஸ்தர்கள் தாக்கத்தொடங்கியிருப்பதானது, சோவியற்அரசும், செஞ்சீனாவும் தங்களுக்குச் சமாதானத்தில் ஆசையிருப்பதாக வற்புறுத்திச் சொன்னவற்றைத் தொடர்ந்தே நடந்திருக்கிறது; நாம் இதுவரை பார்த்தஅளவுக்குமேலாகச் சோவியற்அரசு தனதுசமாதானஆசையைத் தக்கசான்றுகளுடன் மெய்ப்பிக்கவேண்டும்; தங்களுக்குச் சமாதானத்தில் ஆசையிருக்கிறதென்பதை நிரூபிக்கக் கம்யூனிஸ்தர்களுக்கு இப்போது ஒருசந்தர்ப்பம் இருக்கிறது; மலேயாவிலும், லாவோஸிலும் போரைநிறுத்தும்படி தென்கிழக்கு ஆசிய கம்யூனிஸ்தர்களுக்கு மஸ்கோத் தலைமைப்பீடம் உத்தரவிடட்டும்பார்ப்போம்."

### ஸ்பெயின் முடியரசாகுமா?

ஸ்பானியசிம்மாசனத்துக்கு உரிமை பாராட்டிவருகின்ற தொன்ஜுவான் இளவரசரின் புதல்வரான பதினைந்து வயதுடைய ஜுவான் கார்லோஸ் இளவரசரே ஸ்பானியஅரசராகத் தெரிவு செய்யப்படவேண்டுமென்பதை அத்தேசமுடியரசுக்கட்சியினர் அதிபெருந்தொகையாக ஆதரித்துநிற்பதாக மதிரித்நகரிலிருந்து சமாச்சாரம் கிடைத்திருக்கிறது. இவ்வருடத்திலே 61வயதுடையவராகவிருக்கின்ற ஜெனறல் பிராங்கோஅவர்கள் ஸ்பானியமுடியரசுப்பிரச்சினையைத் தீர்த்துவைக்குஞ் சார்புடையராய்இருப்பதாகத் தெரியவருகிறது. தற்போது ஐரோப்பாவில் எட்டுமுடியரசுநாடுகளே இருந்துவருகின்றன. இவற்றுடன் ஸ்பெயினும் சேருமானால் அவற்றின்தொகை ஒன்பதாகும்.

## எது உகந்தது?

வறுமையோ, செல்வமோ அல்லது இரண்டிற்கும் இடைநடுவிலுள்ள நிலைமையோ, எதுஉகந்தது? ஒன்றில், வறுமைவாழ்வு வாழவேண்டும், அல்லது செல்வநிலையை அடைந்து செழிக்கவேண்டும். இரண்டுங்கெட்டான் நிலையிலிருந்து இடர்ப்படுகிறோமே என்று மக்களிற்பெரும்பாலோர் இன்று ஓலம் எழுப்புகின்றனர். ஆனால், அன்றொருநாள் பக்தன்ஒருவர் இந்தஉலகத்துக்கு முற்றும்மாறாகப் பகவானை வேண்டுகின்றார். இதோ அது: "ஓ, பகவானே! என்னை வறியவனாக்கிப் போடாதே; ஆக்கினால் நான்உன்னைத் தூஷிப்பேன்; எனக்குச் செல்வத்தைக் கொடுத்துவிடாதே; கொடுத்தாயானால், உன்னை மறந்தேபோவேன்." இக்கூற்றிலிருந்து அந்தமகான் மத்திமதர வாழ்க்கையையே பெரிதும்விரும்பிவேண்டியிருக்கிறார்என்பது தெளிவாகிறது.

மாந்தரின் மகத்தானதுன்பங்களுக்கெல்லாம் வறுமைதான் மூலகாரணம். 'கொடிதுகொடிது வறுமைகொடிது' என்றார் நமது முதுப்பெருங் கவியரசி ஔவைப்பிராட்டியார். மனிதவேட்கை இன்பங்காணத் துடிக்கிறது. இன்பம் நுகர்வதற்கு அத்தியாவசியமானவற்றில்ஒன்றுசெல்வப்பேறு. அதைஅடைதற்காக மனிதன் பலதுறைகளிலும் வேட்டையாடுகிறான். ஆயினும் அது அவனிடம் எளிதில் வந்தடைந்துவிடுவதாயில்லை. கடும்வெளியிலே கானலைக் கண்டு, நீரெனக்கொண்டு, தாகசாந்தி செய்வதற்காகக் குடல்தெறிக்க வேகமாய்ஓடும் மானினம்போல், மனுக்குலமும் இன்பசாந்தியடைவதற்கு ஏதுவாகிய செல்வப்பொருளையடைய ஓடிக்கொண்டிருக்கிறது. ஓடோடிக்கொண்டிருக்கும் இந்தமனுக்குலம் அந்த இலக்கை அடைந்துவிடுகிறதா? கிடையாது. பெரும்பாலும் நேர்மையற்ற முறைகளைப் பிரயோகித்துப் பகற்கொள்ளைபுரிவதில் சிரமமெடுக்கும்—மனச்சாட்சிக்குவிரோதமாகக் கிரியைகளைஆற்றும்—ஒருசில நாகரீகச்சூறையாளரிடம் மட்டும் செல்வமானது சென்று சரணடைந்துவிடுவது என்னமோஉண்மைதான். அதன்நியதியும் மர்மந்தான். வாழப்பிறந்தவன் மனிதன், வெயர்வைசிந்த ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும் நேர்மை தவறாமல் உழைக்கவேண்டியது அவன் கடன். அதன்விளைவு ஆண்டவனால் அருளப்படுவதாகும்.

மனிதன் பிறக்கும்போது வெறுமையாய் (நிர்வாணம்)ப் பிறக்கின்றான். வறுமைஎன்பது வெறுமையைக்குறிக்கிறது. வெறுமையாய்ப்பிறந்த மனிதன்தான் பிறகு செல்வத்தைஈட்டுகிறான். ஆகவே, வறுமை இயற்கைப்பொருளென்றும், செல்வம் செயற்கைப்பொருளென்றும் அர்த்தந்தருகின்றன. இயற்கையோடுஇணைந்து இன்பங்காண்பதே மெய் இன்பமாகும். அதன்இனிமையே ஒருதனிச்சிறப்புப் பெற்றுவிளங்கும். பாடுபட்டுப் பணிபலசெய்தும் பயனொன்றும் அடைந்தோமில்லையென்று புலம்புகிறோம். பாடுபட்டுத்தேடிப் பணத்தைப் படைத்தவர்கள்தான் திருப்தியானவாழ்க்கை நடத்துகிறார்களாவென்றால், அதுவுமில்லைத்தான். எந்த நிலைமையிலும் 'மனத்திருப்தி' தான் மனிதனுக்குச் சாந்தியையும், சந்தோஷத்தையும் கொடுக்கவல்லது. வறுமையென்றும், செல்வம்என்றும், இடைநடு நிலைமையென்றும் பேதாபேதங்களை மனிதன் கற்பித்து, அதனால் வீணான கவலைகளையெல்லாம்—வேண்டாத பொறாமைகளையெல்லாம் தானாகவே் தேடிக்கொண்டு திண்டாடுகிறான். இயற்கையைப்போல் வறுமையும் சாசுவதமான ஒன்றெனஎண்ணிப் பேராசையை வருந்தியழையாமல், தத்தம்கடமைகளை முழுமனதோடும் செய்துவரும்போது, மனிதர் என்னநிலைமையில்இருந்தாலும் இறைவனின் அருளால் இன்பங்காண்பார்கள். வறுமையையாராவது விரும்பியழைப்பார்களா? மாட்டார்கள். ஆனால், அதன் நிஷ்களங்க தன்மைகளை 'அடியார்க்கடியான்' ஒருவர் பின்வரும்பாடலில் மிகவும் இனிமையாக எடுத்துக்கூறுகிறார். இதுஅநேகருக்கு மனஆறுதலைக்கொடுத்து, கடந்தகால அநுபவ உணர்ச்சிகளையெல்லாம் கிளறிவிட்டுச் சிந்திக்கச்செய்யவும் உபயோகமாயமைந்திருக்கிறது.

"வறுமையே யுன்னை
  வாழ்த் துகின்றேன்.
அறிவினைப் பெருக்கி
  ஆணவம் விலக்கிச்
சாந்த மளித்திடு
  சற்குரு உனைப்போல்
மாந்தரு ளுளரோ!
  மற்றெது முளதோ!
பணத்தின் திமிரால்
  பவவினை புரிந்தோன்
குணத்தில் மாற்றம்
  கொள்கிறா னுன்னால்
தன்பிழை காண்கிறான்
  நன்னடை கொள்கிறான்
மன்னுயி ரெல்லாம்
  ஒன்றென வெண்ணி
அன்புடை யோனாய்
  ஆகிறான் பின்னும்
கோபம் குறைக்கிறான்
  பாபந் தவிர்க்கிறான்
ஆடம் பரத்தை
  அடியொடு விடுக்கிறான்
ஏழையர் துயரம்
  எளிதி லறிகிறான்
தாழ்மை வாழ்வில்
  தன்வெறுப் பொழிக்கிறான்
உண்மை நெறியை
  உணர்ந்திடு கின்றான்
நில்லோம் நிலைத்துச்
  செல்வோம் என்னும்
செல்வம் பெற்றுச்
  சிறந்த காலை
நாடிய சுற்றம்
  நண்பர் மற்றும்
கூடியே நின்று
  குலவி யோரில்
அற்பமை நன்றா
  யறிந்திடு கின்றான்
நற்போ தனையில்
  நாட்டங் கொள்கிறான்
மருத்துவன் கத்தி
  வருத்தினும் வெகுவாய்
பெருநலம் பயக்கும்
  பெந்தியைப் போல
நின்வா வதனால்
  நன்மை யடைகிறான்
இன்னவை யுணரார்
  ஏழனம் பேசியே
உன்னை வெறுக்கிறார்
  விந்தை என்னே!"

(உ. தா.)

— எலிசபேத்மகாராணியாரின் முடிசூட்டுவிழாவிற்குச் சமுகமளிக்குமாறு லண்டன்நகர்சென்றுள்ள யப்பானிய சக்கரவர்த்தியின் பட்டத்துக்குமாரனான அகிஹிற்றோஇளவரசர் சென்ற 5-ந் திகதியன்று பக்கிங்காம்மாளிகையிலே மகாராணியாரின் பேட்டி பெறலாயினர். இற்றைக்கு 32 வருடங்களின்முன் தமதுதந்தையாருக்குப்பின் யப்பானிய பட்டத்துக்குமாரன்ஒருவர் பக்கிங்காம்மாளிகையிலே அரசபேட்டி பெற்றது இதுவே முதன்முறையாகும்.

— பிரித்தானியதேசம் இறக்குமதி செய்யும்தேயிலையில் நூற்றுக்குத் 96 வீதமும் அதன்சாம்பிராச்சிய நாடுகளிலிருந்தே இறக்குமதிசெய்யப்படுகிறது. இதிலேகாற்பங்கும் இலங்கையிலிருந்தே செல்கின்றது. இவ்வாண்டின் முதல் மூன்றுமாதங்களிலும் பிரித்தானி இறக்குமதிசெய்த இலங்கைத்தேயிலை 2கோடியே 88லட்சத்து 60ஆயிரம் றாத்தல். இதற்குப் பிரித்தானி இறுத்தபணம் 56,53,000 பவுண்.

## வேத வினவிடை

### — VIII —

ஆவியானவர்
எங்களை அர்ச்சிப்பவர்

### (3) தேவசிநேகம்

(முன்தொடர்ச்சி)

83. முழுப்பூசைக் கடனுக்கு விரோதமான கிரியைகளுள் எவை சாவானபாவமாகும்? எவை அற்ப பாவமாகும்?

பூசை முழுவதுக்குமோ, மூன்றில் ஒருபகுதிக்கோ, முக்கியமானஒருபகுதிக்கோ சமூகம்கொடாமல் அல்லது கவனம்செலுத்தாமலிருப்பது சாவானபாவமாகும். உதாரணமாகத் துவக்கத்திலிருந்து காணிக்கை வரைக்கும், அல்லது பிரசங்கத்துக்குமுந்தினவைகளோடு அனுபவிப்புக்குப் பிந்தினவைகளையும்சேர்த்தால் பூசையின் மூன்றில் ஒருபகுதியாகும். காணிக்கை, தேவவசீகரம், அனுபவிப்புஎன்பவை பூசையின் முக்கியமானபகுதிகளாம். தேவவசீகரத்துக்கும் அனுபவிப்புக்கும் ஒரே பூசையில் சமூகம்கொடுப்பது அவசியம்.

முக்கியமில்லாதபகுதிகளுக்கு மூன்றில் ஒன்றுக்குக்குறைவாய்ச் சமூகம் கொடாமல் அல்லது கவனம்செலுத்தாமலிருப்பது அற்பபாவமாகும். ரூஷியாவுக்காக மன்றாடாமல்போவது அமைச்சலுக்கு அல்லது பிறர்சிநேகத்துக்கு விரோதமான பாவமொழிய முழுப்பூசைக்கு விரோதமான பாவமல்ல. பிரசங்கத்துக்குச் செவிகொடாமலிருப்பது விசுவாச அறிவுக்கு விரோதமான பாவமொழிய முழுப்பூசைக்கு விரோதமான பாவமல்ல. அப்படிச்செவிகொடாததினால் கனமானதீங்கைத் தேடிக்கொண்டால், அது சாவானபாவமாகும்.

84. எத்தனைவிதமான தேவதுரோகங்கள் உண்டு?

மூன்று. 1-வது குருத்துவபட்டங்களைப் பெற்றவர்களையும், சந்நியாசநேர்த்திசெய்தவர்களையும் மோகத்தினாலேயோ நிந்தையினாலேயோ அராசாங்க நீதிஸ்தலத்துக்கு இழுப்பதினாலேயோ அவமதிக்கிற ஆள்த்தேவதுரோகமாம். 2-வது கோயில்களையும் பிரேதக்குழிகளையும் மோகம், கொலை, களவுமுதலிய வெளிப்பாவங்களினால் அல்லது தகுதியில்லாதவரை அடக்கம்செய்வதினால்அசுத்தப்படுத்துகிற இடத்தேவதுரோகமாம். 3-வது திவ்வியானுமானங்களைத் தகுதியில்லாமல்பெற்றோ, நற்கருணைவைக்கப்படும் பாத்திரங்களையும் துணிகளையும் தொட்டோ, அர்ச்சியசிஷ்டபண்டங்களையும் திருப்பண்டங்கள் சுரூபங்களையும் பழுதுபடுத்தியோ, கோயிற்சொத்துக்களையும் பணங்களையும் திருடியோ அவமானப்படுத்துகிற பொருட்தேவதுரோகமாம்.

85. நேர்த்திகளின்மேல் திருச்சபைக்குரிய அதிகாரம்என்ன?

தரித்திரம் விரத்தம் அமைச்சல்என்னும் சந்நியாசநேர்த்திகளுக்கு நிபந்தனைகளை ஏற்படுத்தவோ, கனமான நியாயங்களினிமித்தம் நேர்த்திகளை நீக்கவோ நிறுத்தவோ மாற்றவோ திருச்சபைக்கு அதிகாரம் உண்டு.

86. தேவசிநேகப்புண்ணியத்துக்கு இசைவான ஞானவரம் ஆவது என்ன?

தேவசிநேகக் கற்பனைகளின் நோக்கத்தை நன்றாய்உணர்ந்து, அவைகளை அனுசரிப்பதினால் சகலத்தையும் தேவமகிமைக்குக் கீழ்ப்படுத்துவதற்காக ஆவியானவருடைய ஏவுதல்களை ஏற்றுக்கொள்ளப்பண்ணும் பூகிக்கிறமனசின் பக்குவமே ஞானவரமாம்.

87. தேவசிநேகப்புண்ணியத்துக்கு இசைவான பரம அன்புக்கனி ஆவது என்ன?

ஆவியானவர் நம்மால் தேவசிநேகக் கிரியையொன்றை உத்தமமாய்ச் செய்துமுடிப்பதினால் நமக்கு வருவிக்கும் இன்பமுள்ள பாக்கியமே பரமஅன்புக் கனியாம்.

## அம்மா! நீங்கள் எனக்காக...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்களாக இந்தப்பயம் என்னை ஆட்கொண்டிருந்தது. என் புதல்வனின் உயிரைக்காப்பாற்றும்படி விடாமல் பிரார்த்தித்தேன்.

நான்காவது நாள்காலை பயம் மறைந்தது. என் மன்றாட்டுக் கேட்கப்பட்டது என்னும் நம்பிக்கை உதித்தது. ஆம், செபமாலை இராக்கினி என்மன்றாட்டுக்கு இரங்கினாள். என் மகன் உயிர்பிழைத்தான். அவனை மரணத்தினின்று காப்பாற்றியதற்கு நன்றியாக அன்றுகாலை பூசைகண்டு, திவ்வியநன்மைவாங்கி ஒப்புக்கொடுத்தேன். "கவலைப்படாதீர்கள்; நமது மகன் உயிரோடிருக்கிறான்; சீக்கிரம் அவனிடமிருந்து செய்திவரும்" என்று எனது கணவரிடம் கூறினேன்.

அன்றே செய்திவந்தது: "நான்சுகம். தயவுசெய்து கவலைப்படவேண்டாம். பழைய விலாசத்துக்கு எழுதவேண்டாம். என்கடிதத்தைப்பார்த்துப் பதில்எழுதுங்கள்.

என்மகன் ஏறிச்சென்றகப்பல் நீரில்மூழ்கடிக்கப்பட்டதாக மறுநாள் பத்திரிகைகளில் செய்திவெளியாயிற்று. நான்கு வாரங்களாகக் காத்திருந்து செபித்தேன். ஒருநாள் அதிகாலை "அம்மா, அப்பா" என்று சொல்லிக் கதவைத்தட்டின சத்தம்கேட்டது. என்மகன் சற்று வயதானவன்போல் காணப்பட்டான். அவன் உயிர்தப்பிக்கொண்டவிதத்தை அறியவிரும்பினேம். "எங்கள் கப்பலில் நெருப்புப்பிடித்தது; போர்ணியோதீவின்அருகில் முதலைகள் ஏராளம். அந்தக்கடலில் நான் குதித்து இரவுவரை நீந்தினேன்; கடைசியாக ஒருகப்பல் கல்லறையின் வாயினின்று என்னைக் காப்பாற்றியது" என்றான்.

என்மகன் கத்தோலிக்கன் அல்ல. தனக்குவந்த சகல ஆபத்துகளையும், அவற்றினின்று தப்பிய விதத்தையும் அவன் எடுத்துக்கூறினான். "அம்மா, சிலநாட்களில் எங்களைச்சுற்றிநின்ற கப்பல்கள் யாவும் ஒன்றன்பின் ஒன்றாக மூழ்கடிக்கப்பட்டன; ஆனால், நாங்கள் பத்திரமாகத் துறைசேர்வோம்; இரவில் நான் கப்பலின்மேல் தட்டில்ஏறி, நீங்கள் இருக்கும் பக்கம்திரும்பி, "அம்மா, நான் இன்னும் உயிரோடிருக்கிறேன்; எனக்காக நீங்கள் இன்று செபமாலை செபிக்கத் தவறவில்லை என்பது நிச்சயம்" என்பேன். அம்மா, நான் பேசியது உங்களுக்கு எப்பொழுதாவது கேட்டதா?" என்றான்.

நேசமகனுக்காக ஆயிரம் செபமாலைகள் பெரியகாணிக்கையல்ல. அநேககத்தோலிக்கர் தங்கள் வாழ்நாளெல்லாம் செபமாலைசெபித்து வருகின்றனர். நான் தேவதாயாரை அறிந்து மூன்றுவருடங்களே ஆகின்றன. இப்பொழுது நான் அத்திருத்தாயாரின் முன் நின்று, "தாயே, இந்தநன்றிக்கடனை நான் எப்படிச்செலுத்துவது? நீர்கொடுத்த ஒவ்வொரு வாக்குறுதியையும் நீர் நிறைவேற்றினீர்; ஒப்பந்தத்தின்படி நடந்துகொண்டீர்; கைமாறு கொடுக்க என்னிடம் ஒன்றும் இல்லை; அம்மா, என் மகன் இருக்கிறான்; அவனை நீர் எடுத்துக்கொள்ளும்' என்கிறேன்.

### அதிகமான் அரசாங்கஉதவி

நெல், வெங்காய உற்பத்தியைத் திருத்திவிருத்திசெய்வதற்கெனத் தங்களுக்குக் கொடுபடும்உதவி போதியதல்லவென்று வடபகுதியிலுள்ள கமக்காரர் மனுப்பண்ணிக்கொண்டதின் பேரிலே அவர்களுக்கு அதிகமான அரசாங்கஉதவி அருளப்படவிருக்கிறது. உணவுஉற்பத்திக்கான கருமங்களுக்கெனக் கடன்பணம் கொடுத்தும், உணவுஉற்பத்தி அதிகாரிகளைக் கொடுத்தும், வெங்காயஉற்பத்திக்குரிய மாதிரித்தோட்டங்களை ஒழுங்குபடுத்தியும் இந்தஉதவி அருளப்படவிருக்கிறது.

* * *

— ஜேர்மனியிலே மேற்குப் பேர்லின்நகர எஞ்ஜினியரான ஏணெஸ்ற் ஸ்ரான்னேபின்என்பவர் 430 றாத்தல் மாத்திரமே நிறையுடையதும், 200 சி. சி. எஞ்ஜின்பூட்டியதுமான பாரமற்ற கார் ஒன்றைக் கட்டியிருக்கின்றார். பத்துஅடிநீளமுள்ள இந்தக்கார் இரு ஆசனங்களைஉடையது. இதன்விலை 166 பவுண்வரையில் இருக்குமென மதிப்பிடப்படுகிறது.

அர்ச். பிரான்சீஸ்கு சவேரியார்

### திருநாள்

புங்குடுதீவு

இத்திருநாள் வழமைப்பிரகாரம் வைகாசிமாதம் 11-ந்திகதி ஆரம்பமாகி 20-ந்திகதி காலை திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்துடன் முடிவடையும். இத்திருநாளுக்குவரும் யாத்திரிகர்கள் தங்குவதற்கேற்ற ஓர் மட்டும், தண்ணீர்ப்பந்தலும் புதிதாய் அமைக்கப்பட்டிருக்கிறது.

கட்டளைக்குரவர்

கத்தோலிக்குத் தமிழ்க்கதைக்கு

### ஐநூறு ரூபா பரிசு

கத்தோலிக்க வாழ்க்கையை அடிப்படையாகக்கொண்டு எழுதப்பெறும் கதைநூல்களில் சிறந்ததற்குத் தமிழ் இலக்கியக் கழகத்தார் ஐநூறுரூபா பரிசுஅளிப்பதாய் ஆறுதிங்களுக்குமுன் விளம்பரம்செய்திருந்தனர். பரிசுக்கென இரண்டு கையெழுத்துப்பிரதிகளே கிடைத்தன. "மலரோ, மணமோ" என்றதலைப்புடன் வண. பி. பி. சேவியர் சுவாமிஅவர்கள், (புனித சூசையப்பர்கோயில், நம்மியந்தல், காஞ்சி P. O., போளூர்வழி, வடஆற்காடு) எழுதிய நூலுக்கே கோயமுத்தூரில் தமிழ்க்கத்தோலிக்க எழுத்தாளர் பேரவை நடைபெறும்பொழுது பரிசுவழங்கப்பெறும்.

இந்நூல் மிகவும்சிறந்த கருத்துக்களைத் தன்னகத்தேகொண்ட கவர்ச்சியுள்ளகதை. தமிழ்நடையும் மிகவும் அழகானமுறையில் அமைந்துள்ளது. இப்புத்தகம் மூன்றுமாதங்களில் அச்சிட்டு வெளிவரும்.

## கத்தோலிக்க தமிழ் எழுத்தாளர் பேரவை கோயம்புத்தூரில் நடைபெறும்

தமிழ்இலக்கியக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்றுவரும் கத்தோலிக்க தமிழ்எழுத்தாளர்பேரவை நிகழும்ஆண்டு கோயம்புத்தூரில் மேமாதம் 21-ஆம்நாள் தொடங்கி, 24-ஆம நாள்மட்டும் நடைபெறும். தமிழ்நாட்டின் பலபாகங்களிலிருந்து கோவையில் எழுத்தாளர்பலர் கூடுவர்என எதிர்பார்க்கப்படுகிறது. இக்கூட்டங்களுக்குத் தமிழ்நாட்டின் நான்குமேற்றிராணிமார் தலைமைதாங்குவர். அர்ச். சூசையப்பர் கல்லூரிப் பேராசிரியர் தோமஸ் சீனிவாசன்அவர்கள் பேரவையைத் திறந்துவைப்பார்கள். அறிஞர்பலர் கத்தோலிக்குச்சிந்தனையை எழுத்தாலும், வானொலிபோன்ற ஏனைய சிந்தனைபரப்பும் கருவிகளாலும் எவ்வாறு பரப்பலாம்என ஆராய்வர். மகாவந். தோமஸ் பர்னாந்து, மகாவந். வெண்மணி செல்வநாதர், மகாவந். M. ஆரோக்கியசாமி, திருவாளர்கள் இரத்தினம், A. T. அந்தோனிசாமிப்பிள்ளை, இலங்கைவித்துவான் F. X. நடராஜா, வண. ஆ. யோ. அடைக்கலம் முதலியோர் விரிவுரைகள் நிகழ்த்துவர்.

மேலும் பிற்பகல் பொதுக்கூட்டங்கள் நடைபெறும். பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை, பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், ஔவை துரைசாமிப்பிள்ளை ஆகியஅறிஞர்கள் கத்தோலிக்கஎழுத்தாளர்கள் தமிழ்இலக்கியத்துக்கு ஆக்கிய தொண்டினைப்பற்றிப் பேருரைகள் நிகழ்த்துவர்என எதிர்பார்க்கப்படுகின்றது.

கோயம்புத்தூருக்கு வருபவர் தம்சொந்தச்செலவில் வரவேண்டும். ஆனால், அங்கு அவர்கள் மேன்மைதங்கிய கோயம்புத்தூர் மேற்றிராணி ஆண்டவர் அவர்களின் விருந்தினராக வரவேற்கப்படுவார்கள். பேரவைக்குவருபவர் மேமாதம் 21-ஆம்நாள் காலையில் எதிர்பார்க்கப்படுவர்.

தமிழ்இலக்கியக் கழகத்தின் உறுப்பினர், கத்தோலிக்குத் தமிழ் எழுத்தாளர், இன்னும் இலக்கியத்துறையிலும், அப்போஸ்தலத்துவத்திலும் ஈடுபாடுடைய இருபாலாரும் பேரவையிற் கலந்துகொள்ளுமாறு அழைக்கப்படுகின்றனர்.

பேரவையிற் கலந்துகொள்ள விரும்புவோர் மேமாதம் 15-ஆம் நாளுக்குமுன் கீழ்க்கண்டமுகவரிக்கு எழுதி வரவேற்புச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

வண. சேவியர் தனிநாயகம்
தமிழ் இலக்கியக் கழகம்,
தூத்துக்குடி.

தூத்துக்குடி
21-4-53

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, May 14-5-1953